கூட்டுறவு உணவு மற்றும் நுகர்வோர்

பாதுகாப்புத்துறை

# ‘உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு

# கொள்கை விளக்கக் குறிப்பு

## 2024 – 2025

மானியக் கோரிக்கை எண். 13


# அர.சக்கரபாணி

உணவு மற்றும் உணவுப் பொருள்

வழங்கல் துறை அமைச்சர்



தமிழ்நாடு அரசு

2024

# பொருளடக்கம்


| இயல் எண் | தலைப்பு | பக்கம் எண். |
| --- | --- | --- |
| 1 | உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை | 1-46 |
| 2 | நுகர்வோர் பாதுகாப்பு | 47-71 |
| 3 | விலைக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் | 72-74 |
| 4 | அமலாக்கம் - குடிமைப் பொருள் வழங்கல் குற்றப்புலனாய்வுத் துறை | 75-85 |
| 5 | தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் | 86-152 |
| 6 | தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம் | 153-161 |
| | முடிவுரை | 162-164 |

## இயல்-1

## உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை

### முன்னுரை

அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன்
பெற்றான் பொருள் வைப்புழி

- திருவள்ளுவர்

1.1 தமிழ்நாடு அரசு கடந்த 50 ஆண்டுகளாக அனைத்து தரப்பு மக்களுக்கும் பொருளாதார மற்றும் சமூகப் பாகுபாடின்றி உணவு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பு அளிப்பதை உறுதி செய்யும் பொருட்டு அனைவருக்குமான பொது விநியோகத் திட்டத்தை நடைமுறைப்படுத்தி வருகிறது. மாநிலத்தில் எந்தவொரு நபரும் பட்டினியின்றி இருப்பதை உறுதி செய்வதே அரசின் கொள்கையாகும். பொது விநியோகத் திட்டத்தின் கீழ் அனைவருக்குமான உணவுப் பாதுகாப்பு

இலக்கினை அடைய அரசு தொடர்ந்து பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. "உணவுக்கான உரிமை" என்பது மாண்பமை உச்ச நீதிமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்ட வாழ்வதற்கான அடிப்படை உரிமையில் உள்ளடங்கியுள்ளது. அனைவருக்கும், குறிப்பாக ஏழை மற்றும் விளிம்பு நிலைக் குடிமக்களுக்கு உணவுப் பாதுகாப்பினை வழங்குவதே தமிழ்நாட்டின் பொது விநியோகத் திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

1.2 தமிழ்நாடு அரசு, தரமான உணவு தானியம் கொள்முதல் செய்தல், பாதுகாப்பான முறையில் சேமித்தல், உரிய பயனாளிக்கு முறையான அங்கீகாரத்திற்குப் பின்பு விநியோகம் செய்தல் உள்ளிட்ட அம்சங்களுடன் தனது உணவுக் கொள்கையினை வகுத்துள்ளது. இத்துடன் தகவல் தொழில்நுட்பத்தின் மூலம் மேம்படுத்தப்பட்ட குறைதீர்

அமைப்பு செயல்பட்டு வருகிறது. இன்றியமையாப் பொருட்களின் விலை அதிகரிக்கும் போது உரிய நேரத்தில் தலையிட்டு விலையினைக் கட்டுப்படுத்த அரசால் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது.

1.3 பல்வேறு நேர்மையற்ற வர்த்தக நடைமுறைகளிலிருந்து நுகர்வோர்களைப் பாதுகாக்கும் பொருட்டு உரிய நுகர்வோர் விழிப்புணர்வுப் பணி தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தன்னார்வ நுகர்வோர் அமைப்புகள், குடிமக்கள் நுகர்வோர் மன்றங்கள் மற்றும் பல்ஊடகப் பிரச்சாரங்கள் மூலம் விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. மேலும், மாவட்ட நுகர்வோர் குறைதீர் ஆணையம் மற்றும் மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையம் ஆகிய சட்டப்பூர்வ மன்றங்கள் வழியாகவும் தீர்வுகள் வழங்கப்படுகின்றன. மேலும், உடனடித் தீர்வு

பெறும் வண்ணம் மாற்று நடைமுறை குறைதீர் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

## 1.4 பொது விநியோகத் திட்டம்:

தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டம், 2013 தமிழ்நாட்டில் 2016-ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப் பட்டது. ஆனாலும் ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலாக நம் அரசு அனைவருக்குமான பொது விநியோகத் திட்டத்தை நடைமுறைப்படுத்தி வருகிறது. அனைவருக்குமான பொது விநியோகத் திட்டமானது சமூகப் பொருளாதார பேதமின்றி அனைத்துக் குடிமக்களுக்கும் உணவுப் பாதுகாப்பினை உறுதி செய்கிறது. தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டத்தின்படி குடும்ப அட்டைதாரர்களுக்கு அரிசி, கோதுமை மற்றும் சிறுதானியம் வழங்கப்படுகிறது. தமிழ்நாட்டின் அனைவருக்குமான பொது விநியோகத் திட்டத்தில்

மேற்குறிப்பிட்ட உணவு தானியங்களுடன் சர்க்கரை மற்றும் சிறப்பு பொது விநியோகத் திட்டத்தின் கீழ் துவரம் பருப்பு மற்றும் பாமாயில் ஆகியவை விநியோகிக்கப்படுகின்றன. சிறுதானியங்களின் பயன்பாட்டை ஊக்குவிக்கும் வகையில் நீலகிரி மற்றும் தருமபுரி ஆகிய இரு மாவட்டங்களில் அரிசிக்குப் பதிலாக ஒரு குடும்பத்திற்கு 2 கிலோ வீதம் கேழ்வரகு விநியோகம் செய்யப்படுகிறது.

**1.5 நியாயவிலைக் கடைகள்** :

பொது விநியோகத் திட்டப் பொருட்கள் அனைத்தும் நியாய விலைக் கடைகள் வாயிலாக விநியோகம் செய்யப்படுவதால், அவற்றின் பராமரிப்பு மற்றும் அட்டைதாரர்கள் எளிய முறையில் அணுகுதல் போன்ற நடவடிக்கைகளுக்கு முக்கியத்துவம் தரப்படுகிறது. நியாய விலைக் கடைகள் பெரும்பாலும் பொது

நிறுவனங்கள் மற்றும் / சுயஉதவிக் குழுக்களால் நடத்தப்படுகின்றன. தனியார் மூலம் கடைகள் நடத்த அனுமதிக்கப்படுவதில்லை. பெரும்பாலான நியாய விலைக் கடைகள் கூட்டுறவுத் துறையின் கீழ் செயல்படும் கூட்டுறவுச் சங்கங்கள் வாயிலாகவும் மற்ற நியாய விலைக் கடைகள் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், மகளிர் சுய உதவிக் குழுக்கள் மற்றும் இதர கூட்டுறவு அமைப்புகள் வாயிலாகவும் நடத்தப்படுகின்றன. அட்டைதாரர்களின் குடியிருப்புப் பகுதிகளிலிருந்து சமவெளிப் பகுதிகளில் 1.5 கிலோ மீட்டர் தொலைவிற்கு உட்பட்டும், மலைப் பகுதிகளில் 1 கிலோ மீட்டருக்கு மிகாமலும் கடைகள் நடத்தப்பட்டு வருகின்றன. மக்களின் தேவைக்கேற்ப, அவசியம் ஏற்படும் இடங்களில், பகுதி நேரக் கடைகள் மற்றும் நகரும் நியாய விலைக் கடைகள் செயல்படுத்தப்பட்டு

வருகின்றன. இதன் காரணமாக, அப்பகுதி குடும்ப அட்டைதாரர்கள் இன்றியமையாப் பொருட்களை எளிதாகப் பெற முடிகிறது.

**1.6 தமிழ்நாட்டில் 31.05.2024 நிலவரப்படி செயல்பாட்டில் உள்ள நியாய விலைக் கடைகளின் விவரம் :**

| வ. எண் | நிறுவனம் | முழு நேரம் | பகுதி நேரம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1. | கூட்டுறவுத் துறை (கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரின் கட்டுப்பாட்டின் கீழ் செயல்படுபவை) | 24,646 | 10,202 | 34,848 |
| 2. | தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் | 1,309 | 196 | 1,505 |
| 3. | இதர கூட்டுறவு நிறுவனங்கள் | 132 | 29 | 161 |
| 4. | மகளிர் சுயஉதவிக் குழுக்கள் | 415 | 25 | 440 |
| மொத்தம் | | 26,502 | 10,452 | 36,954 |

1.7 தனியார் வாடகைக் கட்டடங்களில் இயங்கும் நியாய விலைக் கடைகளுக்குச் சொந்தக் கட்டடங்கள் கட்டுவதற்கு அரசு தொடர்ந்து அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகிறது. இக்கட்டடங்கள் மாவட்ட நிர்வாகத்தின் மூலம் பல்வேறு நலத்திட்டங்களின் கீழ் பெறப்படும் நிதியினைப் பயன்படுத்திக் கட்டப்படுகின்றன. இன்றைய நிலவரப்படி 19,872 நியாய விலைக் கடைகள் சொந்தக் கட்டடங்களிலும், 9,285 நியாய விலைக் கடைகள் வாடகையில்லாக் கட்டடங்களிலும், 7,797 நியாய விலைக் கடைகள் வாடகைக் கட்டடங்களிலும் செயல்படுகின்றன.

## 1.8 புதிய முழு நேர / பகுதி நேர நியாய விலைக் கடைகளின் விவரங்கள்:

கடந்த மூன்று ஆண்டுகளில் (மே 2021 முதல் 31.05.2024 முடிய) குடும்ப அட்டைதாரர்களின் வசதிக்கென, 2009 புதிய நியாயவிலைக் கடைகள் (699 முழு நேரக்கடைகள் மற்றும் 1,310 பகுதிநேரக் கடைகள்) புதிதாக திறக்கப்பட்டுச் செயல்பட்டு வருகின்றன.

## 1.9 முன்மாதிரி நியாயவிலைக் கடைகள்:

நியாய விலைக் கடைகளின் தரம் மற்றும் பராமரிப்பை உறுதி செய்வதற்காக 2023- ஆம் ஆண்டு முதல் ISO தரச்சான்று அறிமுகப்படுத்தப்பட்டது. இந்நடவடிக்கையில் 9,873 நியாய விலைக் கடைகள் தரம் மற்றும் பராமரிப்பிற்காக ISO:9001 சான்றிதழையும், 2,059 நியாய விலைக் கடைகள் பாதுகாப்பான

உணவுச் சங்கிலி மற்றும் சேமிப்பிற்காக ISO:28000 சான்றிதழையும் பெற்றுள்ளன. மேலும், நியாய விலைக் கடைகளின் உள் மற்றும் வெளிப்புறச் சூழலை மேம்படுத்தும் வண்ணம், முதற்கட்டமாக 2022-2023-ஆம் ஆண்டில் 3,139 நியாய விலைக் கடைகள் நவீனமயமாக்கப்பட்டு மேம்படுத்தப்பட்டன. இரண்டாம் கட்டமாக, 5,000 நியாய விலைக் கடைகளுக்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, 31.05.2024 நிலவரப்படி, 3,700 நியாய விலைக் கடைகள் நவீனமயமாக்கப்பட்டு மேம்படுத்தப்பட்டுள்ளன. மீதமுள்ள 1,300 நியாய விலைக் கடைகளை மேம்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**1.10 மின்னணு குடும்ப அட்டைகள்:**

நியாய விலைக் கடைகளில் உள்ள விற்பனை முனைய இயந்திரத்தில் சரிபார்க்கும் வண்ணம் துரிதக்

குறியீடுடன் கூடிய மின்னணு குடும்ப அட்டைகள் விநியோகிக்கப்பட்டுள்ளன. அட்டைதாரர்கள் தங்களுக்கான அத்தியாவசியப் பண்டங்களை உரிய விரல்ரேகை சரிபார்ப்பிற்குப் பின்னர் பெறும் வசதி வழங்கப்பட்டுள்ளது. மேலும், "ஒரே நாடு ஒரே குடும்ப அட்டை" திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டில் உள்ள எந்தவொரு நியாய விலைக் கடையிலும் இன்றியமையாப் பொருட்களைப் பெற்றுக் கொள்ளலாம். மே 2021 முதல் மே 2024 வரை, 15,79,393 புதிய மின்னணு குடும்ப அட்டைகள் தகுதியான விண்ணப்பதாரர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

**1.11** ஒவ்வொரு பயனாளியின் ஆதார் எண் அடிப்படையில் குடும்ப அட்டை வழங்கப்படுவதால், போலி குடும்ப அட்டைகளின் புழக்கம் தடுக்கப்பட்டுள்ளது. இருப்பினும் 5 வயதிற்குட்பட்ட

குழந்தைகள் மற்றும் ஆதார் எண் எடுக்க இயலாத மாற்றுத் திறனாளிகள் ஆதார் எண் உள்ளீடு இன்றி பொது விநியோகத் திட்டத்தின் கீழ் பயனாளிகளாகச் சேர்க்கப்பட்டுள்ளனர்.

## 1.12 மின்னணு குடும்ப அட்டைகளின் வகைகள்:

தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டம், 2013-இன்படி பொது விநியோகத் திட்டத்தினைச் செயல்படுத்தும் நோக்கில் மின்னணு குடும்ப அட்டைகள் கீழ்க்கண்டுள்ளவாறு ஐந்து வகைகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. 31.05.2024 நிலவரப்படி, குடும்ப அட்டைகளின் எண்ணிக்கை பின்வருமாறு உள்ளது.

| வ. எண். | குடும்ப அட்டையின் வகை | வழங்கப்படும் இன்றியமையாப் பண்டங்கள் | குடும்ப அட்டைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | முன்னுரிமை குடும்ப அட்டைகள் (PHH) | அரிசி உள்ளிட்ட அனைத்துப் பொருட்களும் | 95,81,846 |
| 2. | முன்னுரிமை குடும்ப அட்டைகள் – அந்தியோதயா அன்னயோஜனா (PHH-AAY) | 35 கிலோ அரிசி உள்ளிட்ட அனைத்துப் பொருட்களும் | 18,64,099 |
| 3. | முன்னுரிமையற்ற குடும்ப அட்டைகள் (NPHH) | அரிசி உள்ளிட்ட அனைத்துப் பொருட்களும் | 1,05,22,987 |
| 4. | முன்னுரிமையற்ற குடும்ப அட்டைகள் – சர்க்கரை (NPHH-S) | சர்க்கரை விருப்ப குடும்ப அட்டைகள் (அரிசி தவிர பிற பொருட்கள்) | 3,80,280 |
| 5. | முன்னுரிமையற்ற குடும்ப அட்டைகள் – எப்பொருளும் இல்லாதவை (NPHH-NC) | எப்பொருளும் இல்லை | 64,708 |
| மொத்த மின்னணு குடும்ப அட்டைகள் | | | 2,24,13,920 |

**1.13 நகல் மின்னணு குடும்ப அட்டை அஞ்சல் வழியில் பெறும் வசதி :**

ஏப்ரல் 2023 முதல் விவரங்கள் மாற்றம் / தொலைந்து போன / சேதமடைந்த காரணங்களுக்காக நகல் மின்னணு குடும்ப அட்டைகள் தேவைப்படும் அட்டைதாரர்களுக்கு இந்திய அஞ்சல் வாயிலாக பயனாளிகளின் இருப்பிடத்திற்கு அனுப்பப்படுகின்றன. www.tnpds.gov.in என்ற இணையதளம் வாயிலாக நகல் குடும்ப அட்டைக்கு விண்ணப்பிக்க வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. மேலும், நகல் / மின்னணு குடும்ப அட்டைக்கான கட்டணமாக ரூ.50/- அட்டைதாரரிடமிருந்து மின்னணு முறையில் பெறப்படுவதால், நகல் குடும்ப அட்டையைப் பெற சம்பந்தப்பட்ட அலுவலகத்தை நேரில் அணுக வேண்டிய அவசியமில்லை.

05.04.2023 முதல் 31.05.2024 வரை 4,54,635 நகல் மின்னணு குடும்ப அட்டைகள் அஞ்சல் வழியாக பயனாளிகளின் இருப்பிடத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

**1.14 குடும்ப அட்டைத் தரவினைத் தூய்மைப்படுத்துதல் :**

குடும்ப அட்டைத் தரவுத்தளத்தை மேம்படுத்த அரசு அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது. மே 2021 முதல் மே 2024 வரை 4,49,545 ஒரு நபர் குடும்ப அட்டைகள் ஒப்புவிப்பு செய்யப்பட்டும், 19,38,788 குடும்ப உறுப்பினர்கள் இறப்பு, புலம் பெயர்தல் போன்ற பல்வேறு காரணங்களால் குடும்ப அட்டைத் தரவுகளில் இருந்து நீக்கம் செய்தும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இறந்த நபர்களின் விவரங்களைப் பிறப்பு / இறப்பு பதிவாளரிடமிருந்து தமிழ்நாடு மின்னாளுமை முகமை வாயிலாக உரிய

காலவரையறை முறையில் பெறப்பட்டு, பொது விநியோகத் திட்ட தரவுத் தொகுப்பு மேம்படுத்தப்பட்டு வருகிறது.

**1.15 அந்தியோதயா அன்னயோஜனா குடும்ப அட்டைகள்:**

இலக்கிடப்பட்ட பொது விநியோகத் திட்டத்தின் கீழ் அன்றாட உணவுத் தேவைகளுக்காக பொது விநியோகத் திட்டத்தை மட்டுமே சார்ந்துள்ள முன்னுரிமைக் குடும்பங்களில் சில குடும்பங்கள் அந்தியோதயா அன்னயோஜனா குடும்பங்களாக வரையறுக்கப்பட்டுள்ளன. தமிழ்நாட்டிற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள அந்தியோதயா அன்னயோஜனா குடும்பங்களின் எண்ணிக்கை 18,64,600 ஆகும். இக்குடும்பங்களுக்கு குடும்ப உறுப்பினர்களின் எண்ணிக்கையை கணக்கில் கொள்ளாமல் ஒரு

குடும்பத்திற்கு மாதந்தோறும் 35 கிலோ உணவு தானியம் விலையின்றி வழங்கப்பட்டு வருகிறது. இக்குடும்பங்கள் வறுமையிலும் வறுமை நிலையில் உள்ள குடும்பங்கள் என வரையறுக்கப்பட்டுள்ளன.

### 1.16 காவல் / சிறை மற்றும் வனத்துறை பணியாளர்களுக்கான குடும்ப அட்டைகள்:

காவல், சிறை மற்றும் வனத் துறை போன்ற சீருடைப்பணியாளர்கள் பயன்பெறும் வண்ணம் பொது விநியோகத் திட்ட இன்றியமையாப் பொருட்களைப் பொது விநியோக விலையில் பாதியாகக் குறைத்து கீழ்க்கண்ட விலையில் விநியோகம் செய்யப்படுகின்றன.

| | |
|---|---|
| சர்க்கரை | ரூ.12.50/- |
| துவரம் பருப்பு | ரூ.15.00/- |
| பாமாயில் | ரூ.12.50/- |

இரண்டாம் நிலைக் காவலர்கள் முதல் ஆய்வாளர்கள் வரையிலான காவல் துறைப்

பணியாளர்கள், வனக் காவலர் முதல் வனச் சரகர் வரையிலான வனத் துறைப் பணியாளர்கள் மற்றும் இரண்டாம் நிலைக் காவலர் முதல் துணைச் சிறைக் காவலர் வரையிலான சிறைத் துறைப் பணியாளர்கள் இதன்மூலம் பயன்பெற்று வருகின்றனர். அவர்களது முன்னுரிமையற்ற குடும்ப அட்டைகள் (NPHH) தரவுத் தொகுப்பில் காவலர் (NPHH-Police) குடும்ப அட்டைகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. 31.05.2024 நிலவரப்படி, 62,158 காவலர் அட்டைகள் நடைமுறையில் உள்ளன.

**1.17 அன்னபூர்ணா திட்டம் மற்றும் முதியோர் ஓய்வூதியத் திட்டப்பயனாளிகள்:**

பொது விநியோகத் திட்டத்தின் கீழ், மாநிலத்தில் வசிக்கும் 4,988 அன்னபூர்ணா (ANP) மற்றும் 3,05,134 முதியோர் ஓய்வூதியப் பயனாளிகளுக்கு

மாதமொன்றுக்கு முறையே 10 கிலோ மற்றும் 5 கிலோ அரிசி விலையில்லாமல் வழங்கப்பட்டு வருகிறது.

**1.18 பொது விநியோகத் திட்டத்தின் கீழ் இன்றியமையாப் பொருட்களின் வழங்கல் அளவு :**

உணவு தானியங்களான அரிசி, கோதுமை, மற்றும் சர்க்கரையுடன் மண்ணெண்ணெயும் பொது விநியோகத் திட்டத்தின் கீழ் குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. துவரம் பருப்பு மற்றும் பாமாயில் ஆகியவை சிறப்புப் பொது விநியோகத் திட்டத்தின் கீழ் மானிய விலையில் விநியோகிக்கப்படுகின்றன. நீலகிரி மற்றும் தர்மபுரி மாவட்டங்களில் ஒரு குடும்பத்திற்கு மாதம் ஒன்றுக்கு 2 கிலோ வீதம் கேழ்வரகு வழங்கப்படுகிறது. அரிசி, கோதுமை, கேழ்வரகு ஆகியவை விலையில்லாமல் வழங்கப்படுகிறது. பொது

விநியோக முறையின் கீழ் இந்தப் பொருட்களின் விநியோக அளவு மற்றும் விற்பனை விலை விவரம் பின் வருமாறு :

<table>
<tr><th>வ. எண்</th><th>பொருட்கள்</th><th>விற்பனை விலை(கிலோ / லிட்டர் ஒன்றுக்கு)</th><th>விநியோக அளவு</th></tr>
<tr><td>1</td><td>அரிசி</td><td>விலையில்லை</td><td>தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டம், 2013 இன்படி, அனைத்து அரிசி அட்டைதாரர்களும் ஒரு நபருக்கு (குழந்தைகள் உட்பட) மாதம் ஒன்றுக்கு 5 கிலோ அரிசி பெறத் தகுதியுடையவர்கள். தமிழ்நாட்டின் அனைவருக்குமான பொது விநியோகத் திட்டத்தின்படி, முன்பு வழங்கப்பட்ட அளவு மாற்றப் படவில்லை மற்றும் அதே அளவு கீழே வழங்கப்படுகிறது:<br>ஒரு குடும்ப அட்டையில் ஒருவர் மட்டுமே இருந்தால், 12 கிலோ அரிசி வழங்கப்படுகிறது, ஒரு உறுப்பினருக்கு NFSA இன்கீழ் 5 கிலோ மட்டுமே வழங்கப்படுகிறது. உரிமைகள் பின்வருமாறு : (1 வயது வந்த உறுப்பினர் = 1 யூனிட், 1 குழந்தை = 0.5 யூனிட்)<br>
<table>
<tr><td>1 யூனிட் = 12 கி</td><td>12கிலோ</td></tr>
<tr><td>1.5 யூனிட்=14 கி</td><td>14கிலோ</td></tr>
<tr><td>2 யூனிட்=16 கி</td><td>16கிலோ</td></tr>
<tr><td>2.5 யூனிட்=18 கி</td><td>18கிலோ</td></tr>
<tr><td>3 மற்றும் 4 யூனிட்=20 கி</td><td>20கிலோ</td></tr>
</table>
5 யூனிட்டுகள் மற்றும் அதற்கு மேல் ஒரு உறுப்பினருக்கு 5 கிலோ அரிசி கிடைக்கும்.AAY கார்டுதாரர்கள் ஒரு கார்டுக்கு 35 கிலோ அரிசி வழங்கப்படுகிறது.</td></tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| 2. | கோதுமை | விலையில்லை | சென்னை மாநகரம் மற்றும் மாவட்டத் தலைமையகத்தில் ஒரு குடும்ப அட்டைக்கு மாதம் ஒன்றுக்கு அதிகபட்சமாக 10 கிலோவும், மற்ற பகுதிகளில் 5 கிலோவும் அரிசிக்குப் பதிலாக வழங்கப்படுகிறது. |
| 3. | சர்க்கரை | அந்தியோதயா அன்னயோஜனா பயனாளிகளுக்கு கிலோ ரூ.13.50/- மற்ற பயனாளிகளுக்கு கிலோ ரூ.25.00/- | அரிசி குடும்ப அட்டைதாரர் களுக்கு மாதம் ஒன்றிற்கு ஒரு நபருக்கு 500 கிராம் வீதம் அதிகபட்ச அளவு ஒரு குடும்ப அட்டைக்கு 2 கிலோ, மற்றும் சர்க்கரை விருப்ப குடும்ப அட்டைதாரர்களுக்கு குடும்ப அட்டை ஒன்றுக்கு அரிசிக்கு பதிலாக கூடுதலாக மாதம் ஒன்றிற்கு 3 கிலோ சேர்த்து அதிகபட்சமாக 5 கிலோ அளவில் வழங்கப்படுகிறது. |
| 4. | மண்ணெண்ணெய் | லிட்டர் ஒன்றுக்கு ரூ.15.00/- முதல் ரூ.16.50/- வரை | குடும்ப அட்டைதாரர்களின் இருப்பிடம் மற்றும் பெற்றுள்ள எரிவாயு இணைப்பின் எண்ணிக்கை ஆகியவற்றின் அடிப்படையில் விநியோகம் மேற்கொள்ளப்படுகிறது. |
| 5. | துவரம் பருப்பு | கிலோ ஒன்றுக்கு ரூ.30/- | ஒரு குடும்ப அட்டைக்கு மாதமொன்றிற்கு ஒரு கிலோ வீதம் வழங்கப்படுகிறது. |
| 6. | பாமாயில் | லிட்டர் ஒன்றுக்கு ரூ.25/- | ஒரு குடும்ப அட்டைக்கு மாதமொன்றிற்கு ஒரு லிட்டர் வீதம் வழங்கப்படுகிறது. |

### 1.18.1 அரிசி :

முன்னுரிமை குடும்ப அட்டை (PHH) பயனாளிகளின் எண்ணிக்கையின் அடிப்படையில் மத்தியத் தொகுப்பிலிருந்து இந்திய அரசால் அரிசி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. ஒதுக்கப்பட்ட அரிசி இந்திய

உணவுக் கழகத்தின் வாயிலாகப் பெறப்படுகிறது. 01.01.2023 முதல் மாதாந்திர ஒதுக்கீட்டு அளவில் இந்திய அரசு முன்னுரிமை குடும்ப அட்டை (PHH) மற்றும் அந்தியோதயா அன்னயோஜனா (AAY) குடும்ப அட்டைதாரர்களுக்கு உணவு தானியங்களை இலவசமாக வழங்கி வருகிறது, மேலும், ஒரு கிலோ ரூ.8.30/- என்ற விலையில் ஈடுசெய் ஒதுக்கீடு (Tide Over) அளவும் ஒன்றிய அரசால் வழங்கப்படுகிறது. அரிசிக்கான மாதாந்திர ஒதுக்கீடு பின்வருமாறு :

| வ. எண் | வகை | மாத ஒதுக்கீடு (மெ.டன்னில்) |
|---|---|---|
| 1 | அந்தியோதயா அன்னயோஜனா (AAY) | 62,477.66 |
| 2 | முன்னுரிமை குடும்பங்கள் (Priority Households) | 1,42,476.91 |
| 3 | ஈடுசெய் ஒதுக்கீடு (Tide Over) | 92,078.73 |
| | மொத்தம் | 2,97,033.30 |

அனைவருக்குமான பொது விநியோகத் திட்டத்தினைச் செயல்படுத்தும் நோக்குடன், இந்திய அரசின் ஒதுக்கீடை விட கூடுதலாக மாதத்திற்கு ஒரு இலட்சம் மெட்ரிக் டன் அரிசி முன்னுரிமையற்ற குடும்ப அட்டைதாரர்களுக்கு (NPHH) வழங்குவதற்காக ஒதுக்கப்படுகிறது. சராசரியாக மாதாந்திர அரிசியின் நுகர்வு 3.63 இலட்சம் மெட்ரிக் டன் ஆகும். இந்திய அரசின் ஒதுக்கீடு போக கூடுதலாக தேவைப்படும் அரிசிக்கான செலவினத் தொகையைத் தமிழ்நாடு அரசு முழுமையாக ஏற்கிறது.

### 1.18.2 பொது விநியோகத் திட்ட அரிசியினை செறிவூட்டுதல்:

இரத்த சோகை மற்றும் நுண்ணூட்டச்சத்துக் குறைபாடுகளிலிருந்து குடும்ப அட்டைதாரர்களைப் பாதுகாக்கும் வண்ணம் இரும்புச்சத்து, ஃபோலிக் அமிலம்

மற்றும் வைட்டமின் பி12 ஆகியவை கொண்ட குருணைகள் பொது விநியோகத் திட்ட அரிசியுடன் 1:100 என்ற விகிதத்தில் கலக்கப்பட்டு, மாநிலம் முழுவதும் உள்ள அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு 01.04.2023 முதல் வழங்கப்பட்டு வருகிறது. தலசீமியா மற்றும் அரிவாள் செல் இரத்த சோகை போன்ற குறைபாடுகளுக்குச் செறிவூட்டப்பட்ட அரிசி பயன்பாடு தவிர்க்கப்பட வேண்டும் என்பதால் "தலசீமியா நோயாளிகள் மருத்துவக் கண்காணிப்பின் கீழ் எடுத்துக் கொள்ளலாம்" எனவும் "அரிவாள் செல் இரத்த சோகை உள்ளவர்கள் இரும்புச் சத்துள்ள உணவுப் பொருட்களை உட்கொள்ள வேண்டாம்" எனவும் அறிவுறுத்தப்பட்டு ஒவ்வொரு செறிவூட்டப்பட்ட அரிசி மூட்டையிலும் இச்செய்தி அச்சிடப்பட்டுள்ளது.

**1.18.3 கேழ்வரகு** :

2023-2024 வரவு செலவுத் திட்டத்தின் போது சட்டசபையில் அறிவிக்கப்பட்டபடி, குடும்ப அட்டைதாரர்கள் சத்தான ஊட்டச்சத்து நுகர்வினைப் பெறும் வகையிலும் சிறுதானியங்கள் உற்பத்தியை ஊக்குவிக்கவும், மே 2023 முதல் கேழ்வரகு விநியோகிக்கப்பட்டு வருகிறது. நீலகிரி மற்றும் தருமபுரி மாவட்டங்களில் ஒவ்வொரு குடும்பத்திற்கும் அரிசிக்குப் பதிலாக 2 கிலோ கேழ்வரகு என்ற விகிதத்தில் வழங்கப்பட்டு வருகிறது. கேழ்வரகின் நுகர்வு மாதாந்திரச் சராசரி 750 மெட்ரிக் டன் ஆகும். இந்திய அரசின் மாதாந்திர ஒதுக்கீடு 870 மெட்ரிக் டன் ஆகும்.

**1.18.4 சர்க்கரை** :

எப்பொருளும் வேண்டா குடும்ப அட்டை வகையினரைத் தவிர மற்ற குடும்ப அட்டை வகையினர்

அனைவரும் சர்க்கரை பெறத் தகுதியுடையவராவர். இதற்குத் தேவைப்படும் சர்க்கரையின் அளவு மாதம் ஒன்றிற்குச் சுமார் 34,104 மெ.டன் ஆகும். இதில் ஒன்றிய அரசினால் 1,864 மெ.டன், கிலோ ஒன்றிற்கு ரூ.18.50/- என்ற மானிய விலையில் அந்தியோதயா அன்னயோஜனா திட்டத்தின் (AAY) கீழ் உள்ள குடும்ப அட்டைப் பயனாளிகளுக்கு மட்டும் ஒதுக்கீடு செய்யப்படுகிறது. இதர குடும்ப அட்டை வகையினருக்கு விநியோகிக்கும் பொருட்டு, கூடுதல் தேவையான சர்க்கரை அளவினை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள் மூலமாகவும், வெளிச்சந்தையிலும் கொள்முதல் செய்கிறது. அந்தியோதயா அன்னயோஜனா திட்டத்தின் (AAY) கீழ் உள்ள குடும்ப அட்டைப் பயனாளிகளுக்கு கிலோ ஒன்றிற்கு ரூ.13.50/- க்கும் இதர குடும்ப அட்டைகளுக்கு

ரூ.25/-க்கும் தமிழ்நாடு அரசினால் சர்க்கரை வழங்கப்பட்டு வருகிறது.

**1.18.5 கோதுமை** :

அனைத்து அட்டைதாரர்களுக்கும் அவர்களுடைய உணவு தானிய உரிம அளவில், அரிசிக்குப் பதிலாக விலையில்லாமல் கோதுமை வழங்கப்படுகிறது. இந்திய அரசு முன்னுரிமை மற்றும் முன்னுரிமை - அந்தியோதயா அன்னயோஜனா பயனாளிகளுக்கு மட்டும் 8,576.02 மெட்ரிக் டன் கோதுமை மாதாந்திர ஒதுக்கீடாக வழங்குகிறது. கூடுதல் தேவையை ஈடுசெய்ய வெளிச் சந்தை கொள்முதல் திட்டத்தின் கீழ் (உள்நாடு) 15,000 மெட்ரிக் டன் கோதுமை கொள்முதல் செய்ய அரசாணை வெளியிடப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

**1.18.6 மண்ணெண்ணெய்:**

சமையல் எரிவாயு இணைப்பு பெறாத மற்றும் ஒரு எரிவாயு இணைப்பு பெற்றுள்ள அட்டைதாரர்களுக்கு மண்ணெண்ணெய் விநியோகம் செய்யும் பொருட்டு ஒன்றிய அரசு 01.04.2021 முதல் மாதம் ஒன்றிற்கு 7,536 கிலோ லிட்டர் ஒதுக்கி வந்ததை ஏப்ரல் 2024 முதல் மாதம் ஒன்றிற்கு 1,084 கிலோ லிட்டர் ஆகக் குறைத்துள்ளது. தற்போது எரிவாயு இணைப்பில்லாமல் 28.52 இலட்சம் குடும்ப அட்டைகள் உள்ளன. ஒரு எரிவாயு இணைப்புள்ள குடும்ப அட்டைகள் 85.58 இலட்சம் உள்ளன. இந்த அட்டைகளுக்கு முறையே அதிகபட்சம் 10 லிட்டர் மற்றும் 5 லிட்டர் மண்ணெண்ணெய் வழங்க உரிமம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஒன்றிய அரசின் ஒதுக்கீடானது குடும்ப அட்டைதாரர்களின்

தேவையினைப் பூர்த்தி செய்ய இயலாத நிலை உள்ளதால், மண்ணெண்ணெய்த் தேவையினைப் பூர்த்தி செய்யும் பொருட்டு ஒன்றிய அரசிடம் கூடுதலாக மண்ணெண்ணெய் ஒதுக்கீடு வழங்கக் கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது. மேலும், மண்ணெண்ணெய் பெறத் தகுதியான அட்டைதாரர்களுக்கு மட்டும் விநியோகம் செய்யும் வகையில் எரிவாயு இணைப்பு விவரங்களைக் குடும்ப அட்டைகளுக்கான தரவில் சேர்த்திட உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**1.18.7 சிறப்புப் பொது விநியோகத் திட்டம்** :

பொது விநியோகத் திட்டத்தின் கீழ் சத்தான உணவுப்பொருட்கள் வழங்கவும், வெளிச்சந்தையில் பருப்பு மற்றும் சமையல் எண்ணெய் விலையைக் கட்டுப்படுத்தவும், 2007-ஆம் ஆண்டு அன்றைய முதலமைச்சர் மாண்புமிகு முத்தமிழறிஞர்

டாக்டர் கலைஞர் அவர்கள் சிறப்புப் பொது விநியோகத் திட்டத்தை அறிமுகப்படுத்தினார். இத்திட்டத்தின் கீழ் 1 கிலோ துவரம் பருப்பு மற்றும் 1 லிட்டர் பாமாயில் ஆகியவை குடும்ப அட்டைதாரர்களுக்கு முறையே கிலோ ரூ.30/- மற்றும் லிட்டருக்கு ரூ.25/- என்ற மானிய விலையில் வழங்கப்பட்டு வருகிறது. மாநில உணவு மானியத்தில் இருந்து ஒவ்வொரு மாதமும் சுமார் 20,000 மெட்ரிக் டன் துவரம் பருப்பு மற்றும் 2 கோடி லிட்டர் பாமாயில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மூலம் கொள்முதல் செய்யப்பட்டுக் குடும்ப அட்டைதாரர்களுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

**1.18.8 ரமலான் "நோன்புக்கு" அரிசி வழங்குதல்** :

தமிழ்நாடு அரசு, ரமலான் மாதத்தில் மசூதிகளில் "நோன்புக் கஞ்சி" தயாரிக்க ஒவ்வொரு ஆண்டும் சிறப்பு

ஒதுக்கீடாக அரிசி வழங்கி வருகிறது. "ஒரு கிலோ பச்சரிசி ஒரு ரூபாய்" என்ற மானிய விலையில் மாநிலம் முழுவதும் வழங்கப்படுகிறது. 2023 ஆம் ஆண்டில் இதற்கென 6,980.13 மெட்ரிக் டன் அரிசி வழங்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டு இத்திட்டத்திற்கென 7,040 மெட்ரிக் டன் அரிசி வழங்கப்பட்டது.

**1.19 தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டம், 2013 நடைமுறைப்படுத்துதல்** :

தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டம், 2013, தமிழ்நாட்டில் 01.11.2016 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. தமிழ்நாடு அரசு தேசிய உணவு பாதுகாப்புச் சட்டத்தை நடைமுறைப்படுத்தும் முன்பாகவே அனைவருக்குமான பொதுவிநியோகத் திட்டத்தினைத் தொடர்ந்து செயல்படுத்தி வருகிறது. அரிசி அட்டைதாரர்கள் அனைவரும் அரிசியினைப் பெற

தகுதியுடையவராவர். இச்சட்டச் செயலாக்கத்திற்கு முன்பு பெற்ற உரிம அளவு அல்லது இச்சட்டத்தின்படி நபர் ஒருவருக்கு 5 கிலோ உரிம அளவு பெறுதல் இவற்றில் எது அதிக அளவில் உள்ளதோ அந்த உரிம அளவு வழங்கப்படுவதை அரசு உறுதி செய்துள்ளது.

தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டத்தினைச் செயல்படுத்தும் பொருட்டு, உரிய விதிமுறைகளின் கீழ் முன்னுரிமைக் குடும்பங்கள் அடையாளம் காணப்பட்டு அவர்களது விவரங்கள் www.tnpds.gov.in என்ற இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. அதன்படி விளிம்பு நிலையில் உள்ளோர்/ பொருளாதாரத்தில் பின்தங்கியுள்ளோர் / மாற்றுத் திறனாளிகள் / திருநங்கையர்கள் உள்ளிட்ட பயனாளிகள் அடையாளம் காணப்பட்டு அவர்களுக்கு

முன்னுரிமைக் குடும்ப அட்டைகள் வழங்கப் படுகின்றன.

**1.19.1 குடும்ப அட்டைதாரர்கள் குறைதீர் அமைப்பு முறை :**

குடும்ப அட்டைதாரர்கள் தங்கள் குறைகளைத் தெரிவிக்க தகவல் தொழில்நுட்ப உதவியுடன் பல்வேறு வசதிகள் வழங்கப்பட்டுள்ளன.

- குறைகளைத் தெரிவிக்க தொலைபேசி அழைப்புகள் மேற்கொள்வதற்காக பிரத்யேகமான கட்டணமில்லா எண் 1967 மற்றும் 1800 425 5901 ஆகியவை பயன்பாட்டில் உள்ளன.
- மேலும் www.tnpds.gov.in என்ற பொது வலைதளம் வாயிலாகவும் புகாரைப் பதிவு செய்யலாம்.
- வட்ட அளவிலான அலுவலர்கள் வரை அனைத்து அலுவலர்களுக்கும் வழங்கப்பட்டுள்ள

பிரத்யேகமான மின்னஞ்சல் முகவரி மற்றும் தொலைபேசி எண் வாயிலாகவும் குடும்ப அட்டைதாரர்கள் தங்கள் புகார்களை அனுப்பலாம்.

- அனைத்து அலுவலர்களுக்கும் வழங்கப் பட்டுள்ள பிரத்யேகமான மின்னஞ்சல் முகவரிகள் மற்றும் தொலைபேசி எண்கள் இணையதளத்திலும், நியாய விலைக் கடைகளிலும் வெளியிடப்பட்டுள்ளன.
- மேலும் மக்களின் குறைகளை நிவர்த்தி செய்திடும் பொருட்டும், பொது விநியோகத்திட்டத்தின் செயல்பாடுகளைக் கண்காணிக்கும் பொருட்டும், மாவட்ட வருவாய் அலுவலர்கள் / துணை ஆணையாளர்கள், உணவுப் பாதுகாப்புச் சட்டத்தின்படி மாவட்ட குறைதீர் அலுலவர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

- மாவட்டக் குறைதீர் அலுவலர்களின் தொடர்பு விவரங்கள் இணையதளத்திலும், நியாய விலைக் கடைகளிலும் வெளியிடப்பட்டுள்ளன.

**1.19.2 கண்காணிப்புக் குழுக்கள்** :

தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டம், 2013 மற்றும் தமிழ்நாடு உணவுப் பாதுகாப்பு விதிகள், 2017ன் படி, மாநில / மாவட்ட / வட்ட மற்றும் நியாய விலைக் கடை அளவிலான கண்காணிப்புக் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இக்குழுக்களின் கூட்டங்கள் பொது விநியோகத் திட்டத்தினை முறையாகவும், வெளிப்படைத் தன்மையுடன் செயல்படுத்திடவும் தொடர்ந்து கூட்டப்படுகின்றன.

**1.19.3 மாநில உணவு ஆணையம்** :

தமிழ்நாட்டில் தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டம், 2013 முறையாக அமலாக்கப்படுவதைக் கண்காணிக்கும்

பொருட்டு, ஒரு தலைவர் மற்றும் ஐந்து உறுப்பினர்களைக் கொண்ட மாநில உணவு ஆணையம் அமைக்கப்பட்டுள்ளது.

### 1.20 பொது விநியோகத் திட்டம் முழுக் கணினிமயமாக்கல் :

தமிழ்நாட்டில் பொது விநியோகத் திட்டம் 2016-ஆம் ஆண்டு முழுமையாகக் கணினிமயமாக்கப்பட்டது. அதனையடுத்து அனைத்துக் குடும்ப அட்டைகள், குடும்ப அட்டை வழங்கும் நடவடிக்கைகள், குடும்ப அட்டை விவர மாற்றங்கள் உள்ளிட்ட குடும்ப அட்டை தொடர்பான அனைத்துச் சேவைகளும் இணைய வழியில் மேற்கொள்ளப்படுகின்றன. மேலும், முழுக் கணினிமயமாக்கலின் மற்றொரு பகுதியாக, கிடங்கிலிருந்து இன்றியமையாப் பொருட்கள் நகர்வு செய்யப்படுவது முதல் நியாய விலைக் கடைகளில்

விநியோகம் செய்வது வரை அனைத்து நடவடிக்கைகளும் கணினிமயமாக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் நியாய விலைக் கடைகளுக்கு இன்றியமையாப் பொருட்கள் உரிய முறையில் ஒதுக்கீடு செய்யப்படுவதுடன் அவற்றின் நகர்வு மற்றும் குடும்ப அட்டைதாரர்களுக்கு உரிய முறையில் விநியோகம் செய்யப்படுவது உறுதி செய்யப்படுகிறது. அட்டைதாரரின் கைவிரல் ரேகை நியாய விலைக் கடையில் நிறுவப்பட்டுள்ள விற்பனை இயந்திரத்தில் முறையான சரிபார்ப்புக்குப் பின்பு பொருட்களின் விநியோகம் மேற்கொள்ளப்படுகிறது. இதன் மூலம் உண்மையான பயனாளிக்கு இன்றியமையாப் பொருட்கள் சென்று சேர்வது உறுதி செய்யப்படுவதுடன் முறைகேடுகளும் தவிர்க்கப்படுகின்றன. ஒவ்வொரு மாதமும் சராசரியாக 98.5% பரிவர்த்தனைகள் கைவிரல்

ரேகை சரிபார்ப்பு அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. முழுக் கணினிமயமாக்கல் திட்டமானது பின்வரும் கூறுகளை உள்ளடக்கியுள்ளது:

- பொதுமக்கள் இணையவழியில் புதிய குடும்ப அட்டைக்கு விண்ணப்பிக்கவும், குடும்ப அட்டைகளில் திருத்தங்களை மேற்கொள்ளவும் முடியும். பொதுமக்கள் தங்களது விண்ணப்பத்தின் நிலையினை இணையவழி மூலமாக அறிந்து கொள்ள முடியும்.
- குடும்ப அட்டைகள்/பயனாளிகளின் தரவுகள் மின்னணுமயமாக்குதல்.
- பொது விநியோகத் திட்ட கணினிமயமாக்கல் – விநியோக சங்கிலி மேலாண்மை (கிடங்கிலிருந்து நியாய விலைக் கடை வரை)

- நிகழ்நிலையில் (Online) இன்றியமையாப் பொருட்கள் ஒதுக்கீடு செய்தல்
- குடும்ப அட்டைதாரர்கள் நியாய விலைக் கடைகளின் இருப்பு விவரத்தை இணைய வலைதளத்திலும் (TNPDS Portal) அலைபேசி செயலி மற்றும் முகப்பு வழியாகவும் அல்லது தங்களுக்குரிய குறுஞ்செய்தி மூலமாகவும் அறிய முடியும்.
- நியாய விலைக் கடையில் இன்றியமையாப் பொருள் தொடர்பாக நடைபெறும் ஒவ்வொரு பரிவர்த்தனை விவரமும் குறுஞ்செய்தி மூலமாக சம்பந்தப்பட்ட குடும்ப அட்டைதாரருக்கு அனுப்பப்படுவதால் போலிப் பட்டியலிடுவது தவிர்க்கப்பட்டுள்ளது.

- குடும்ப அட்டைதாரர்கள் தங்களது குறைகளை தெரிவிக்க சீரான குறைதீர் கட்டமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.
- பொது விநியோகத் திட்ட முழுக்கணினி மயமாக்கல் பகுதி-II திட்டத்தின் கீழ் விற்பனை இயந்திரத்துடன் இணைக்கப்பட்ட அச்சிடும் இயந்திரம் வாயிலாக விற்பனைப் பட்டியல்கள் அச்சிட்டு வழங்கப்படுகின்றன.
- மேலும், பகுதி-II திட்டத்தின்கீழ் விற்பனை முனைய இயந்திரங்களில் கருவிழி சரிபார்ப்பு கருவி இணைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் பல்வேறு காரணங்களால் கைவிரல்ரேகை சரிபார்ப்பு மேற்கொள்ளப்பட முடியாத குடும்ப அட்டைதாரர்களுக்கு கண்கருவிழி சரிபார்ப்பின்

மூலம் இன்றியமையாப் பொருட்கள் விநியோகம் செய்யப்படுகின்றன.

### 1.20.1 கைவிரல் ரேகைப் பதிவு (Biometric) முறையில் பொது விநியோகத் திட்டம் :

பொது விநியோகத் திட்டத்தில் பயனாளியாக சேருவதற்கு ஒவ்வொரு தனி நபரும் ஆதார் எண் பெற்றிருப்பது அவசியமாகும். இதனடிப்படையில் 5 வயதிற்குட்பட்ட குழந்தைகள் தவிர 99.42% பயனாளிகளின் ஆதார் விவரங்கள் குடும்ப அட்டைத் தரவுத் தொகுப்பில் இணைக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் கைவிரல்ரேகை / கண்கருவிழி சரிபார்ப்புக்குப் பின்னரே பொருட்கள் விநியோகம் செய்யப்படுகின்றன.

நியாய விலைக் கடைகளுக்கு நேரில் வருகை தர இயலாத உடல்நிலை கொண்டவர்கள் மற்றும்

மாற்றுத்திறனாளிகளின் உணவுப் பாதுகாப்பினை உறுதி செய்யும் பொருட்டு அங்கீகாரச் சான்று மூலம் அங்கீகரிக்கப்பட்ட நபர்கள் வழியாக குடும்ப அட்டைதாரர் நியாய விலைக் கடைகளுக்கு வருகை தராமலேயே அவர்களுக்குரிய பொது விநியோகத் திட்ட பொருட்களைப் பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது.

**1.21 "ஒரே நாடு ஒரே குடும்ப அட்டை" திட்டம் :**

"ஒரே நாடு ஒரே குடும்ப அட்டை" திட்டத்தின்கீழ், தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டம், 2013ன் முன்னுரிமை குடும்ப அட்டைதாரர்கள், வேறு எந்த மாநிலத்திலிருந்தும் தங்களின் உரிமையுள்ள உணவு தானியங்களை, வெற்றிகரமான விரல்ரேகை அங்கீகாரத்திற்குப் பிறகு, தாங்கள் விரும்பும் நியாய விலைக் கடைகளில் இருந்து, மாநிலங்களுக்கு

இடையேயான பரிவர்த்தனை முறையில் தமிழ்நாட்டில் பெறலாம்.

மேலும், மாநிலத்திற்கு உள்ளே பரிவர்த்தனை விருப்பத்தின் கீழ், தமிழ்நாட்டினைச் சார்ந்த எந்தவொரு அட்டைதாரரும் வெற்றிகரமான விரல்ரேகை அங்கீகாரத்திற்குப் பிறகு, தமிழ்நாட்டில் எந்த மாவட்டத்திலும் உள்ள எந்த ஒரு நியாய விலைக் கடையிலிருந்தும் பொது விநியோகத் திட்டத்தின் கீழ் தங்களுக்கு உரிமையுள்ள அனைத்துப் பொருட்களையும் பெறலாம்.

**1.22 பொங்கல் பரிசுத் தொகுப்பு :**

பொங்கல் பண்டிகையைக் கொண்டாடும் வகையில் ஒரு கிலோ பச்சரிசி, ஒரு கிலோ சர்க்கரை மற்றும் ஒரு முழுக் கரும்பு மற்றும் ரூ.1000/-ரொக்கம் அடங்கிய பொங்கல் பரிசுத் தொகுப்பு 2024-இல்

அனைத்து அரிசி அட்டைதாரர்களுக்கும் வழங்கப்பட்டது. இப்பரிசுத் தொகுப்புகள் மறுவாழ்வு முகாம்களில் குடியிருக்கும் இலங்கைத் தமிழர் குடும்பங்களுக்கும் விநியோகிக்கப்பட்டன. அரசு இத்திட்டத்திற்கென ரூ.2,436.18 கோடி நிதி ஒதுக்கீடு செய்தது. 2.19 கோடி குடும்ப அட்டைதாரர்கள் பயனடைந்துள்ளனர்.

**1.23 நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகள்:**

உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை இரண்டு நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகளைக் கொண்டுள்ளது. இலக்கு எண்.2 (பட்டினியின்மை) மற்றும் இலக்கு எண்.7 (கட்டுபடியான விலையில் தூய்மையான எரிபொருள் – சமையலுக்கு தூய்மையான எரிபொருள்) ஆகியவற்றைக் கொண்டுள்ளது.

**(அ). இலக்கு எண் : 2 பட்டினியின்மை :**

நமது மாநிலத்தில் பட்டினியில்லா நிலையை ஏற்படுத்திட அனைவருக்குமான பொது விநியோகத் திட்டத்தின் கீழ் அரிசி, கோதுமை ஆகியவற்றை விலையில்லாமலும், சர்க்கரை, பாமாயில், துவரம் பருப்பு ஆகியவற்றை மானிய விலையிலும் அனைத்துக் குடிமக்களுக்கும் வழங்குவதன் மூலம் மாநில அரசு குடிமக்களின் உணவுப் பாதுகாப்பினை உறுதி செய்வதுடன் மேம்படுத்தப்பட்ட ஊட்டச்சத்தையும் வழங்கி வருகிறது. மேலும், சமூகப் பொருளாதார பேதமின்றி அனைத்து மக்களுக்கும் குடும்ப அட்டைகள் வழங்கி எந்த ஒரு மனிதனும் பசியுடன் இல்லாது இருப்பது உறுதி செய்யப்படுகிறது. இதன்மூலம் நிலையான வளர்ச்சி இலக்கு எண் : 2 (பட்டினியின்மை) முழுமையாக எய்தப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து

நிலைநிறுத்த உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(ஆ). இலக்கு எண் -7: கட்டுபடியான விலையில் தூய்மையான எரிபொருள் – சமையலுக்குத் தூய்மையான எரிபொருள் :**

பொதுத்துறை எண்ணெய் நிறுவனங்களிடமிருந்து பெறப்பட்ட வீட்டு உபயோக எரிவாயு இணைப்பு வைத்திருப்போர் விவரங்களின்படி தமிழ்நாடு 104.8% இலக்கினை 2023-2024-ஆம் ஆண்டில் எய்துள்ளது. மேலும், இதனைத் தொடர்ந்து நிலைநிறுத்த உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. 2006-ஆம் ஆண்டு 28,94,295 குடும்பங்களுக்கு விலையில்லா எரிவாயு அடுப்புகளும், எரிவாயு உருளைகளுக்கான முன்தொகைகளையும் வழங்கி அடித்தளமிட்டவர் அப்போதைய முதலமைச்சர் மாண்புமிகு முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள்.

# இயல் – 2

# நுகர்வோர் பாதுகாப்பு

## 2.1 அரசின் நுகர்வோர் பாதுகாப்புக் கொள்கையானது

- நுகர்வோருக்கு நியாயமான விலையில் தரமான மற்றும் சரியான அளவிலான பொருட்கள் மற்றும் சேவை கிடைப்பது
- உலகமயமாக்கல் மற்றும் டிஜிட்டல் வர்த்தகம் வளர்ந்து வரும் சூழ்நிலைக்கேற்ப நுகர்வோரைப் பாதுகாப்பது
- நியாயமான வர்த்தக முறைகளைக் கண்டறிவது மற்றும் சுரண்டப்படுவதிலிருந்து நுகர்வோரைப் பாதுகாப்பது

இந்த நோக்கத்திற்காக அரசால் பின்பற்றப்படும் நடைமுறைகள் :

1. நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம், 2019-ன்படி நுகர்வோர் உரிமை மற்றும் நுகர்வோர் பொறுப்புகளை மேம்படுத்தவும் தொடர்ந்து விழிப்புணர்வு ஏற்படுத்துதல்.
2. சுரண்டப்படுவதிலிருந்து நுகர்வோர்களைப் பாதுகாக்க, நுகர்வோர் குறைதீர் ஆணையத்தினை அணுகாமலே மாற்றுவழி மூலம் நுகர்வோர் குறைகளைத் தீர்வு செய்தல்.
3. நுகர்வோர்களுக்குச் சேவைகள் வழங்கக்கூடிய அரசுத் துறைகளை மேம்படுத்துவதற்குரிய பரிந்துரைகளை வழங்குவது.

## 2.2 குடிமக்கள் நுகர்வோர் மன்றம்

தற்போது 1817 குடிமக்கள் நுகர்வோர் மன்றங்கள் கல்வி நிறுவனங்களில் செயல்பட்டு வருகின்றன. ஒவ்வொரு குடிமக்கள் நுகர்வோர் மன்றத்திலும்

50 உறுப்பினர்களுக்குக் குறையாமல் இடம் பெற்றுள்ளனர். தன்னார்வ நுகர்வோர் அமைப்பின் உறுப்பினர்களையும், பள்ளி/கல்லூரி ஆசிரியர்களையும் ஒருங்கிணைப்பாளர்களாகக் கொண்டு குடிமக்கள் நுகர்வோர் மன்றத்தின் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நுகர்வோர்களைப் பாதுகாப்பது மற்றும் நுகர்வோர்களுக்கான உரிமைகள் மற்றும் கடமைகள் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் இக்குடிமக்கள் நுகர்வோர் மன்றங்களால் மேற்கொள்ளப்பட்டு வருகிறன்றன.. இதன்மூலம் குடிமக்கள் நுகர்வோர் மன்ற உறுப்பினர்களின் (மாணவர்கள்) குடும்பங்களைச் சென்றடைவதுடன் சமூகத்திலும் விழிப்புணர்வு ஏற்பட வழிவகுக்கிறது.

## 2.3 மாநில மற்றும் மாவட்ட நுகர்வோர் பாதுகாப்புக் குழுக்கள்:

நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம், 1986 மாற்றியமைக்கப்பட்டு, நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம், 2019 நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம், 2019இன் அடிப்படையில் நுகர்வோர் பாதுகாப்பு விதிகள் 29.11.2023-இல் வெளியிடப்பட்டது.

மாநில/ மாவட்ட அளவிலான நுகர்வோர் பாதுகாப்புக் குழுக் கூட்டங்களானது மாநில அளவில் மாண்புமிகு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அவர்களின் தலைமையிலும், மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் தலைமையிலும் நடத்தப்படும்.

மேலும், காலாண்டுக்கு ஒருமுறை தன்னார்வ நுகர்வோர் அமைப்புகளுடன் அரசு மற்றும் தனியார்

துறைகளில் நுகர்வோர்களின் குறைகள் குறித்த கூட்டங்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

**2.4 மாநில நுகர்வோர் சேவை மையம் :**

மாநில நுகர்வோர் சேவை மையம் உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் கீழ் 02.11.2009 முதல் செயல்பட்டு வருகிறது. நுகர்வோர் தாங்கள் பெற்ற பொருட்கள் மற்றும் சேவைகளில் குறைபாடுகள், ஏமாற்றப்பட்ட நேர்வுகள் ஏதும் இருப்பின் அவற்றைத் தெரிவித்து, அதற்குத் தீர்வு காணும் ஒரு மாற்று குறைதீர் அமைப்பாக மாநில நுகர்வோர் சேவை மையம் அரசால் ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேற்படி குறைகள் ஏதுமிருப்பின் கீழ்வரும் விவரப்படி தொடர்புகொண்டு தெரிவிக்கலாம்.

| தொலைபேசி எண் | மின்னஞ்சல் முகவரி | வலைதள முகவரி |
|---|---|---|
| 044 – 2859 2828 | consumer@tn.gov.in | www.consumer.tn.gov.in |

**2.5 நுகர்வோர் பாதுகாப்பு வலைதளம்** :

நுகர்வோர்களுக்கென்றே தனியாக உருவாக்கப்பட்ட www.consumer.tn.gov.in என்ற வலைதளத்தில், நுகர்வோரின் கடமைகள், பொறுப்புகள், வரையறைகள் போன்ற தகவல்கள் தமிழ்நாடு மின் ஆளுமை முகமை உதவியுடன் பராமரிக்கப்பட்டு வருகின்றன. இவ்வலைதளத்தில், நுகர்வோர் பாதுகாப்பு விழிப்புணர்வு குறித்த அனைத்துத் திட்டங்களின் விவரங்கள், நுகர்வோர் உரிமை மீறல் தொடர்பான புகார்களைப் பதிவு செய்யும் விவரங்கள் மற்றும் துறை சார்ந்த நிகழ்வுகள் தொடர்பான தகவல்கள் மேம்படுத்தப்பட்டுள்ளன. மேலும், இத்துறையில் வழங்கப்படும் பிற சேவைகள் தொடர்பான தகவல்களையும் இதில் காணலாம்.

**2.6 தமிழ்நாடு நுகர்வோர் கவசம் – மாத இதழ் :**

இத்துறையின் வாயிலாக தமிழ்நாடு நுகர்வோர் கவசம் என்ற மாத இதழ் வெளியிடப்பட்டு வருகிறது. இந்த இதழ் நுகர்வோருக்கான விழிப்புணர்வு தகவல் மற்றும் இத்துறையின் மூலம் நுகர்வோர் பாதுகாப்பு தொடர்பாக மேற்கொள்ளப்படும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் தொடர்பான தகவல்களுடன் வெளியாகிறது. பொதுமக்கள் / நுகர்வோர் இடையே நேரடித் தொடர்பில் உள்ள அரசுத் துறைகள், குடிமக்கள் நுகர்வோர் மன்றங்கள், தன்னார்வ நுகர்வோர் அமைப்புகள் மற்றும் அனைத்து மாவட்ட நூலகங்களுக்கும் இந்நூல் வழங்கப்பட்டு வருகிறது.

**2.7 தேசிய நுகர்வோர் தினம், உலக நுகர்வோர் உரிமைகள் தினம் கொண்டாடுதல் மற்றும் மாநில அளவிலான நுகர்வோர் விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல்:**

ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 15-ஆம் நாளை உலக நுகர்வோர் உரிமைகள் தினமாகவும் டிசம்பர் 24-ஆம் நாளை தேசிய நுகர்வோர் பாதுகாப்புத் தினமாகவும் அரசால் ஒதுக்கீடு செய்யப்படும் நிதியினைக் கொண்டு மாநில மற்றும் மாவட்ட அளவில் கொண்டாடப்பட்டு வருகின்றது.

மாநில அளவில் அனைத்து மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களிலும் பொதுமக்களாகிய நுகர்வோருக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் நுகர்வோர் முனையம் அமைத்து துறை சார்ந்த நுகர்வோர் பாதுகாப்பு தொடர்பான செயல்பாடுகள் காட்சிப்படுத்தப்பட்டு வருகின்றன.

நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம், 2019 மற்றும் நேரடி விற்பனை விதிகள் 2021-ன்படி மாநில அளவில் நுகர்வோர் பாதுகாப்புத் தொடர்பான அனைத்துத் துறைகளையும் ஒருங்கிணைத்து மாநில அளவிலான கண்காணிப்புக் குழு அமைக்கப்பட்டு இணையவழி வணிகத்தில் ஈடுபடும் அனைத்து வணிக நிறுவனங்களின் செயல்பாடுகள் கண்காணிக்கப்பட்டு வருகின்றன.

**2.8 தமிழ்நாடு மாநில நுகர்வோர் நல நிதி (TNSCWF):**

ஒன்றிய மற்றும் மாநில அரசுகள் தலா ரூ.50 இலட்சம் (50:50) பங்களிப்புடன் ஒரு கோடி ரூபாய் நிதியில் தமிழ்நாடு மாநில நுகர்வோர் நல நிதித்தொகுப்பினை நுகர்வோர்களுக்காக உருவாக்கியுள்ளது. மாநில / மாவட்ட நுகர்வோர் குறைதீர் ஆணையங்களில் வசூலிக்கப்படும் அபராதத்

தொகை மற்றும் கட்டணத்தொகைகளும் இந்நிதித் தொகுப்பில் செலுத்தப்படுகின்றன.

ஒன்றிய அரசு, தொகுப்பு நிதி ஒன்றினை உருவாக்கி அதில் ஒன்றிய மற்றும் மாநில அரசுகளின் பங்களிப்புத் தொகையாக 75:25 என்ற விகிதத்தில் ரூபாய் 10 கோடி (ஒன்றிய அரசு ரூ.7.5 கோடி மற்றும் மாநில அரசு ரூ.2.5 கோடி) ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

தற்போது அத்தொகையானது ரூ.20 கோடியாக உயர்த்தப்பட்டு, அந்நிதியானது தமிழ்நாடு நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் அதிகாரச்சங்கத்தின் வங்கிக்கணக்கில் வைப்புத் தொகையாக வரவு வைக்கப்பட்டுள்ளது.

மூலதன நிதியிலிருந்து பெறப்படும் வட்டித் தொகையானது தமிழ்நாடு மாநில நுகர்வோர் நலநிதிக்கு மாற்றம் செய்யப்படுகிறது. அனைத்து நுகர்வோர்

விழிப்புணர்வு மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்படி மூலதன நிதியின் வட்டித்தொகை மற்றும் தமிழ்நாடு மாநில நுகர்வோர் நலநிதியின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### 2.8.1 தமிழ்நாடு நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் அதிகாரச்சங்கம் (TANSSCOPE):

நுகர்வோர் நலன் சார்ந்த பல்வேறு நடவடிக்கைகளைத் திறம்பட செயல்படுத்திட தமிழ்நாடு நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் அதிகாரச்சங்கம் (TANSSCOPE) எனும் மாநில அளவிலான அமைப்பு அரசால் ஏற்படுத்தப்பட்டுச் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை ஆணையாளரைத் தலைவராகவும், அரசு சார்ந்த மற்றும் அரசு சார்பற்ற துறை

உறுப்பினர்களைக் கொண்டு இச்சங்கம் செயல்படுகிறது.

**2.9 நேரடி வர்த்தகத்தில் நுகர்வோர் பாதுகாப்பு:**

நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம், 2019-ன் படி நேரடி வர்த்தக விதிகள், 2021-ல் தெரிவித்துள்ள வழிமுறைகளின்படி நேரடி வர்த்தகத்தில் ஈடுபடும் அனைத்து நிறுவனங்களின் டிஜிட்டல் வர்த்தகத்தினை நுகர்வோருக்கு நியாயமான முறையில் வழங்கிடவும் அதன் மூலம் நுகர்வோரின் பாதுகாப்பினை உறுதிபடுத்திடவும் மாநில அளவில் நுகர்வோர் பாதுகாப்பு தொடர்புடைய அனைத்துத் துறைகளையும் உள்ளடக்கிய கண்காணிப்பு குழு (Monitoring Committee) அமைக்கப்பட்டுள்ளது.

**2.9.1 நுகர்வோர் முனையம்** :

மாநிலம் முழுவதும் நுகர்வோரிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் பொருட்டு நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் விழிப்புணர்வுத் தகவல்கள் அடங்கிய டிஜிட்டல் பலகையினை ரூ.1 கோடி மதிப்பீட்டில் பொருத்துவதற்கு முடிவு செய்யப்பட்டு, பொதுமக்களாகிய நுகர்வோர்கள் தினந்தோறும் அரசின் அனைத்துத் துறைகள் சார்ந்த சேவைகளைப் பெறுவதற்கு பெருமளவில் கூடக்கூடிய இடங்களில் ஒன்றான அனைத்து மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக வளாகங்களில் பொருத்தப்பட்டு, நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் விழிப்புணர்வுத் தகவல்களை அலுவலக நேரங்களில் காட்சிப்படுத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இவற்றை மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலர்கள் பராமரித்திடும் வகையில் அமைக்கப்பட்டு வருகின்றன.

சென்னை நகரத்தினைப் பொருத்தமட்டில் துணை ஆணையாளர் வடக்கு/தெற்கு கட்டுபாட்டில் சொந்தக் கட்டடத்தில் இயங்கும் மண்டல உதவி ஆணையாளர் (6 மண்டல அலுவலகங்கள்) அலுவலகங்களில் டிஜிட்டல் பலகை அமைத்துக் காட்சிப்படுத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**2.10 இருப்பு விவரங்களை வெளிப்படுத்துதல் மற்றும் கண்காணித்தல்:**

- இன்றியமையாப் பொருட்களின் விலைகள் உயரும் போது ஒன்றிய அரசின் வழிகாட்டுதலின்படி தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

பருப்பு வகைகளைப் பொருத்தமட்டில் குறிப்பாக துவரம்பருப்பு விலை உயர்வை நிலைப்படுத்திட உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படுகின்றன.

- அனைத்து பருப்பு வணிகர்களான அரவை முகவர்கள்/ வர்த்தகர்கள்/ இறக்குமதியாளர்கள் தங்களிடம் உள்ள இருப்பு விவரங்களை ஒன்றிய அரசின் https://fcainfoweb.nic.in/psp/ என்ற வலைதளத்தில் பதிவேற்றம் செய்திடவும் பதிவேற்றம் செய்யப்பட்ட விவரத்தினை கண்காணித்திடவும் அனைத்து மாவட்ட வழங்கல் மற்றும் பாதுகாப்பு அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.
- ஒன்றிய அரசின் வழிகாட்டுதல்களின்படி, பருப்பு வகைகள் கொள்முதல் செய்யும்

இறக்குமதியாளர்கள் சுங்க அனுமதி பெற்ற 30 நாட்களுக்குள் தங்களிடம் உள்ள இருப்பு விவரம் மற்றும் பதிவேற்றம் செய்யப்படாத இருப்பு விவரங்களைப் பதிவிடுமாறு அறிவுறுத் தப்பட்டுக் கண்காணிக்கப்பட்டு வருகிறது.

**2.11 நுகர்வோர் குறைகளுக்கான சட்டப்படியான தீர்வுகள்:**

நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம், 2019 சமூகத்திற்கு தேவையான சட்டம். இது நுகர்வோர்களின் உரிமைகளை வகுத்து, அவற்றிற்கான பாதுகாப்பையும் வழங்குகிறது. நுகர்வோர்களின் குறைகளுக்குக் குறைந்த செலவில், விரைவான தீர்வைப் பெற உதவுகிறது. நுகர்வோர்களின் உரிமைகள் மற்றும் தீர்வுகளை நிலை நாட்டுவதன் மூலம் ஒழுங்கமைக்கப்பட்ட உற்பத்தியாளார்கள், வர்த்தகர்கள்

மற்றும் பல்வேறு வகையான சேவைகளை வழங்குபவர்கள் ஆதிக்கம் செலுத்துவதைத் தவிர்ப்பதற்கு, நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் வழிவகுக்கிறது. இச்சட்டத்தின் "வாங்குபவர்கள் கவனிக்க" என்ற அறிவிப்பானது, பொருட்கள் மற்றும் சேவைகளைப் பெறும் நுகர்வோரின் கவனமின்மை என்ற எச்சரிக்கையை ஏற்படுத்துகிறது. 2019-ஆம் ஆண்டு நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் தேசிய, மாநில மற்றும் மாவட்ட நிலைகளில் கீழ்க்கண்ட நீதிமுறைச் சார்புடைய 3 அடுக்கு குறைதீர் ஆணையங்கள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன:-

1. தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையம்
2. மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையம்
3. மாவட்ட நுகர்வோர் குறைதீர் ஆணையம்

### 2.11.1 தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையம் :

அனைத்து மாநிலங்களிலும் உள்ள நுகர்வோர் குறைதீர் ஆணையங்களுக்கும் மேல்முறையீட்டு ஆணையமாக தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையம் புது தில்லியில் செயல்படுகிறது. நுகர்வோர் வாங்கிய / பெற்ற பொருளின் மதிப்பு / சேவையின் மதிப்பு ரூபாய் இரண்டு கோடிக்கு மேல் இருந்து அதில் ஏதும் குறைபாடு இருப்பின் தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையத்தில் முறையிடலாம். மேலும் இது அனைத்து மாநில ஆணையங்களில் முடிவுற்ற வழக்குகளின் மேல்முறையீடுகளுக்குத் தீர்ப்பளிக்கும் அதிகாரம் மற்றும் மாநில ஆணையங்களின் ஆணைகளைச் சீராய்வு செய்யும் அதிகாரமும் படைத்ததாகும்.

### 2.11.2 மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையம்:

மாவட்ட நுகர்வோர் குறைதீர் ஆணையங்களுக்குத் தலைமை அமைப்பாக மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையம் சென்னையில் செயல்பட்டு வருகிறது. நுகர்வோர் வாங்கிய/ பெற்ற பொருளின் மதிப்பு / சேவையின் மதிப்பு ரூபாய் 50 இலட்சத்திற்கு மேல் ரூபாய் 2 கோடி வரை இருந்து அதில் குறைபாடு இருப்பின் மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையத்தில் முறையிடலாம். இவ்வாணையம் ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதிபதியைத் தலைவராகவும், இரண்டு நீதிமுறை சார் உறுப்பினர்களையும் இரண்டு நீதிமுறை சாரா உறுப்பினர்களையும் அவர்களுள் குறைந்தபட்சம் ஒருவரைப் பெண்ணாகவும் கொண்ட அமைப்பாகும். மாண்புமிகு சென்னை உயர் நீதிமன்றத்தின் மதுரை

கிளையைப் போன்று 13 தென் மாவட்டங்களை உள்ளடக்கிய மாநில ஆணையத்தின் மதுரை சுற்றுக்கிளை 11.08.2012 முதல் மதுரையில் செயல்பட்டு வருகிறது. மே 2024 வரை 34,570 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு அதில் 31,129 வழக்குகள் (90%) முடிக்கப்பட்டுள்ளன.

மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையம், சென்னை மற்றும் மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையத்தின் மதுரை சுற்றுக் கிளை ஆகியவை மாவட்ட நுகர்வோர் குறைதீர் ஆணையங்களின் தீர்ப்புகளின் மேல் எழும் மேல்முறையீடு மற்றும் சீராய்வு மனுக்களைத் தீர்வு செய்யும் அதிகாரம் கொண்டதாகும்.

**2.11.3 மாவட்ட நுகர்வோர் குறைதீர் ஆணையங்கள் :**

எந்த ஒரு நுகர்வோரும் தான் வாங்கிய / பெற்ற பொருள் அல்லது சேவையில் குறை இருப்பின்,

அப்பொருளின்/ சேவையின் மதிப்பு ரூ.50 இலட்சத்திற்கு மிகாமல் இருக்கும் பட்சத்தில், மாவட்ட நுகர்வோர் குறைதீர் ஆணையங்களில் புகார் மனு தாக்கல் செய்யலாம். நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம், 2019-ன்படி, ஒவ்வொரு வருவாய் மாவட்டத்திற்கும் ஒரு மாவட்ட நுகர்வோர் குறைதீர் ஆணையம் இருக்க வேண்டும். இவ்வாணையம் ஓய்வு பெற்ற மாவட்ட நீதிபதி / மாவட்ட நீதிபதி ஆவதற்குத் தகுதியுடைய எந்த ஒரு வழக்குரைஞரைத் தலைவராகவும் மற்றும் இரண்டு உறுப்பினர்களையும், அவர்களுள் குறைந்தபட்சம் ஒருவரைப் பெண்ணாகவும் கொண்ட அமைப்பாகும். மாவட்ட ஆணையங்கள் தோற்றுவிக்கப்பட்ட நாளிலிருந்து மே 2024 வரை 1,38,456 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு அதில் 1,34,087 வழக்குகள் (97%) முடிக்கப்பட்டுள்ளன.

**2.11.4 வழக்குகளைத் திறம்பட தீர்த்தல்** :

சென்னை மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையம் மற்றும் மாவட்ட நுகர்வோர் குறைதீர் ஆணையங்களில் காலியாக இருந்த தலைவர் மற்றும் உறுப்பினர் பதவியிடங்கள் தமிழ்நாடு அரசால் நிரப்பப்பட்ட பின்னர் மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையம், சென்னை மற்றும் மாநில ஆணையத்தின் மதுரை சுற்றுக்கிளை ஆகியவற்றில் குறிப்பாக 30.06.2021 முதல் 31.05.2024 வரை 4,622 நுகர்வோர் வழக்குகள் தீர்க்கப்பட்டுள்ளன. மாவட்ட ஆணையங்களில் பல ஆண்டுகளாக நிலுவையில் இருந்த 15,052 நுகர்வோர் வழக்குகள் தீர்க்கப்பட்டு, தற்போது 17 மாவட்ட ஆணையங்களில் நிலுவையில் உள்ள நுகர்வோர் வழக்குகளின் எண்ணிக்கை 100-க்கும் குறைவாக உள்ளது. மேற்படி ஆணையங்களில்,

நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் 2019-ல் நுகர்வோர் வழக்குகளை முடிப்பதற்கு நிர்ணயிக்கப்பட்ட காலக்கெடுவான 90 நாட்களுக்குள் நுகர்வோர் வழக்குகளுக்குத் தீர்வு காணப்பட்டு வருகின்றன.

**2.12 எதிர்காலத் திட்டம்** :

நுகர்வோர்களின் வசதி மற்றும் நலன் கருதி, அனைத்து நுகர்வோர் ஆணையங்களிலும் காணொளி வாயிலாக நுகர்வோர் வழக்குகளை விசாரித்து, விரைந்து முடிப்பதற்காக அதிநுட்பமான தொலைக்காட்சி (Hybrid TV) வழங்க அரசு நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

**மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையம், சென்னை மற்றும் மாநில ஆணையத்தின் மதுரை சுற்றுக்கிளை ஆகியவற்றில் பதிவு செய்யப்பட்ட மற்றும் முடிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை விவரம்:**

***(ஜனவரி 2023 முதல் - மே 2024 வரை )***

| ஜனவரி 2023 முதல் மே 2024 வரை | மேல்முறையீட்டு மனுக்கள் | | | | | நுகர்வோர் வழக்குகள் | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | மாதத் துவக்கத்தில் நிலுவையிலுள்ள வழக்குகள் | நடப்பு மாதத்தில் பதிவான வழக்குகள் | மொத்தம் | தீர்வு காணப்பட்ட வழக்குகள் | மாத இறுதியில் நிலுவையிலுள்ள வழக்குகள் | மாதத் துவக்கத்தில் நிலுவையிலுள்ள வழக்குகள் | நடப்பு மாதத்தில் பதிவான வழக்குகள் | மொத்தம் | தீர்வு காணப்பட்ட வழக்குகள் | மாத இறுதியில் நிலுவையிலுள்ள வழக்குகள் |
| ஜனவரி | 1745 | 122 | 1867 | 56 | 1811 | 952 | 1 | 953 | 28 | 925 |
| பிப்ரவரி | 1811 | 121 | 1932 | 73 | 1859 | 925 | 3 | 928 | 23 | 905 |
| மார்ச் | 1859 | 144 | 2003 | 83 | 1920 | 905 | 3 | 908 | 26 | 882 |
| ஏப்ரல் | 1920 | 154 | 2074 | 73 | 2001 | 882 | 5 | 887 | 16 | 871 |
| மே | 2001 | 111 | 2112 | 40 | 2072 | 871 | 9 | 880 | 15 | 865 |
| ஜூன் | 2072 | 193 | 2265 | 81 | 2184 | 865 | 5 | 870 | 39 | 831 |
| ஜூலை | 2184 | 171 | 2355 | 74 | 2281 | 831 | 3 | 834 | 27 | 807 |
| ஆகஸ்டு | 2281 | 190 | 2471 | 60 | 2411 | 807 | 3 | 810 | 37 | 773 |
| செப்டம்பர் | 2411 | 180 | 2591 | 95 | 2496 | 773 | 3 | 776 | 22 | 754 |
| அக்டோபர் | 2496 | 148 | 2644 | 116 | 2528 | 754 | 2 | 756 | 31 | 725 |
| நவம்பர் | 2528 | 141 | 2669 | 92 | 2577 | 725 | 9 | 734 | 40 | 694 |
| டிசம்பர் | 2577 | 167 | 2744 | 240 | 2504 | 694 | 1 | 695 | 26 | 669 |
| ஜனவரி | 2504 | 121 | 2625 | 90 | 2535 | 669 | 1 | 670 | 44 | 626 |
| பிப்ரவரி | 2535 | 162 | 2697 | 99 | 2598 | 626 | 9 | 635 | 39 | 596 |
| மார்ச் | 2598 | 152 | 2750 | 116 | 2634 | 596 | 5 | 601 | 17 | 584 |
| ஏப்ரல் | 2634 | 183 | 2817 | 93 | 2724 | 584 | 2 | 586 | 21 | 565 |
| மே | 2724 | 187 | 2911 | 65 | 2846 | 565 | 3 | 568 | 21 | 547 |

## மாவட்ட நுகர்வோர் குறைதீர் ஆணையத்தில் பதிவு செய்யப்பட்ட மற்றும் முடிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை விவரம் : (ஜனவரி 2023 - மே 2024)

| வ. எண் | ஜனவரி 2023 முதல் மே 2024 வரை | மாதத் துவக்கத்தில் நிலுவையில் உள்ள வழக்குகள் | நடப்பு மாதத்தில் பதிவான வழக்குகள் | மொத்தம் | தீர்வு காணப்பட்ட வழக்குகள் | மாத இறுதியில் நிலுவையில் உள்ள வழக்குகள் |
|---|---|---|---|---|---|---|
| 1 | ஜனவரி | 8440 | 393 | 8833 | 673 | 8160 |
| 2 | பிப்ரவரி | 8160 | 374 | 8534 | 677 | 7857 |
| 3 | மார்ச் | 7857 | 366 | 8223 | 817 | 7406 |
| 4 | ஏப்ரல் | 7406 | 323 | 7729 | 540 | 7189 |
| 5 | மே | 7189 | 447 | 7636 | 562 | 7074 |
| 6 | ஜுன் | 7074 | 323 | 7397 | 678 | 6719 |
| 7 | ஜுலை | 6719 | 371 | 7090 | 724 | 6366 |
| 8 | ஆகஸ்டு | 6366 | 392 | 6758 | 642 | 6116 |
| 9 | செப்டம்பர் | 6116 | 315 | 6431 | 553 | 5878 |
| 10 | அக்டோபர் | 5878 | 332 | 6210 | 484 | 5726 |
| 11 | நவம்பர் | 5726 | 380 | 6106 | 601 | 5505 |
| 12 | டிசம்பர் | 5505 | 378 | 5883 | 616 | 5267 |
| 13 | ஜனவரி | 5267 | 333 | 5600 | 506 | 5094 |
| 14 | பிப்ரவரி | 5094 | 446 | 5540 | 598 | 4942 |
| 15 | மார்ச் | 4942 | 425 | 5367 | 692 | 4675 |
| 16 | ஏப்ரல் | 4675 | 456 | 5131 | 661 | 4470 |
| 17 | மே | 4470 | 450 | 4920 | 547 | 4373 |

## இயல்-3

## விலைக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள்

3.1 உணவுப் பொருள் வழங்கல் ஆணையரின் நேரடிக் கட்டுப்பாட்டில் "விலைக் கண்காணிப்புப் பிரிவு" இயங்கி வருகிறது. அரிசி, கோதுமை, பருப்பு, சர்க்கரை, எண்ணெய் வகைகள் மற்றும் காய்கறிகள் உள்ளிட்ட தெரிவு செய்யப்பட்ட உணவுப் பொருட்களின் சில்லரை மற்றும் மொத்த விலைகளை வெளிச்சந்தையில் தினசரி இப்பிரிவு கண்காணித்து வருகிறது. வெளிச்சந்தையில் உணவு தானியங்கள் மற்றும் காய்கறிகளின் விலை திடீரென்று உயரும் போது தகுந்த விலைக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை அரசு மேற்கொள்வதற்கு ஏதுவாக உரிய அறிக்கைகளை உயர் அலுவலர்களுக்கு இப்பிரிவு வழங்குகிறது.

**3.2 தமிழ்நாடு அரசு மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள்:**

மாண்புமிகு உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் விலை கண்காணிப்புக் குழு (Price Monitoring Committee) ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. அதன் மூலம் இன்றியமையாப் பண்டங்கள் விலையேற்றத்தைக் கட்டுப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இன்றியமையாப் பொருட்களின் விலை உயர்வினைக் கட்டுப்படுத்துவது தொடர்பாக மாநில / மாவட்ட அளவில் மொத்த வியாபாரிகள் மற்றும் ஆலை உரிமையாளர்கள் பிரதிநிதிகளுடன் அவ்வப்போது கூட்டங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. 2023 ஜூலை மற்றும் ஆகஸ்ட் மாதங்களில் ஏற்பட்ட தக்காளி விலை உயர்வின் போதும், நவம்பர் மற்றும் டிசம்பர் 2023 மாதங்களில் ஏற்பட்ட வெங்காய விலை உயர்வின்

போதும், அரசு துரித நடவடிக்கை மேற்கொண்டு கூட்டுறவு பண்ணை பசுமைக் கடைகள், கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டக சாலைக் கடைகள், அமுதம் அங்காடிகள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட நியாய விலை கடைகள் மூலம் தக்காளி மற்றும் வெங்காயத்தைச் மலிவு விலையில் விற்பனை செய்ததன் மூலம் விலை உயர்வினைக் கட்டுப்படுத்தியது. நுகர்வோரின் நலனைப் பாதுகாக்கும் வகையில் வெளிச்சந்தையில் இன்றியமையாப் பண்டங்கள் விலையேற்றத்தினைக் கட்டுப்படுத்துவதற்காக ரூ.100 கோடி நிதியில் விலைக் கட்டுப்பாட்டு நிதியம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. தேவைப்படும் நேர்வுகளில், நுகர்வோர் பாதுகாப்புத்துறை வெளிச்சந்தையில் பொருட்களின் விலையேற்றத்தினைக் கட்டுப்படுத்த இந்நிதியினைப் பயன்படுத்தி உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

## இயல்-4

## அமலாக்கம் - குடிமைப் பொருள் வழங்கல் குற்றப்புலனாய்வுத் துறை

### 4.1 அலகின் தோற்றம் மற்றும் பணியாளர்கள் விவரம்:

மாநிலத்தின் குடிமைப் பொருள் வழங்கல் குற்றப்புலனாய்வுத் துறை முதன் முதலாக 'குடிமைப் பொருள் வழங்கல் கண்காணிப்புக் குழுவாக' அரசாணை நிலை எண் 2754, உணவு மற்றும் வேளாண்மைத் துறை, நாள் 01.10.1964 மூலம் தோற்றுவிக்கப்பட்டது. கண்காணிப்புக் குழு (உணவு), அரசின் குறிப்பாணை எண்.9878/AV/70-2 நாள் 09.04.1970 மூலம் உணவுக் குழு (புலனாய்வுத் துறை) எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. மேலும், அரசாணை நிலை எண் 101, உணவுத் துறை, நாள் 16.05.1977 அன்று உணவுக் குழு புலனாய்வுத் துறை என்பது குடிமைப் பொருள் வழங்கல் குற்றப் புலனாய்வுத் துறையாக பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

பொது விநியோகத் திட்டத்தைச் செயல்படுத்த உதவும் இரண்டு முக்கிய சட்டங்களான (i) இன்றியமையாப் பண்டங்கள் சட்டம், 1955 (EC Act) மற்றும் (ii) கள்ளச்சந்தை தடுப்பு மற்றும் இன்றியமையாப் பண்டங்கள் வழங்கல் பராமரிப்புச் சட்டம், 1980 (PBMMSEC Act) மற்றும் ஒன்றிய, மாநில அரசுகள் அவ்வப்போது அறிவிக்கும் பல்வேறு கட்டுப்பாட்டு ஆணைகளைக் குடிமைப் பொருள் வழங்கல் குற்றப்புலனாய்வுத் துறை அமல்படுத்தி வருகிறது. இன்றியமையாப் பண்டங்கள் சட்டத்தின்படி கைது செய்யவும், தொடர்ந்து கடத்தலில் ஈடுபடும் நபர்களை 6 மாத காலத்திற்குத் தடுப்புக் காவலில் கைது செய்யவும் கள்ளச்சந்தை தடுப்பு மற்றும் இன்றியமையாப் பண்டங்கள் வழங்கல் பராமரிப்புச் சட்டம் வழிவகை செய்கிறது. இன்றியமையாப் பண்டங்கள் சட்டம்

புலனாய்விற்கும் வழக்கு விசாரணைக்கும் பயன்படுத்தப்படுகிறது.

குடிமைப் பொருள் வழங்கல் குற்றப்புலனாய்வுத் துறை காவல் துறைத் தலைவர் அவர்களின் தலைமையின் கீழ், 4 காவல் கண்காணிப்பாளர்கள் முறையே, சென்னை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி மற்றும் மதுரை மண்டலங்களிலும், 12 சரகங்களில் காவல் துணைக் கண்காணிப்பாளர்களையும் கொண்டு குடிமைப் பொருள் வழங்கல் குற்றப்புலனாய்வுத் துறையின் 40 அலகுகள் கண்காணிக்கப்பட்டு வருகின்றன. தற்போது 22 அலகுகள் காவல் ஆய்வாளர்கள் தலைமையிலும், 18 அலகுகள் காவல் உதவி ஆய்வாளர்கள் தலைமையிலும் இயங்கி வருகின்றன. இவை தவிர எல்லையோர மாநிலங்களான கேரளா, கர்நாடகா மற்றும்

ஆந்திரப்பிரதேசம் எல்லையோரப் பகுதிகளில் நடைபெறும் பொது விநியோகத் திட்ட பொருட்களின் கடத்தலைத் தடுப்பதற்காக 8 சிறப்பு சுற்றுக் காவல் படைகள் இயங்கி வருகின்றன.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான இந்த அரசு அமைந்த பிறகு, 2 காவல் கண்காணிப்பாளர்கள், 8 துணைக் கண்காணிப்பாளர்கள், 6 காவல் உதவி ஆய்வாளர்கள், 6 தலைமைக் காவலர்கள், 12 முதல் நிலைக் காவலர்கள், 6 இரண்டாம் நிலைக் காவலர்கள், 1 பிரிவு கண்காணிப்பாளர், 1 உதவியாளர், 2 இளநிலை உதவியாளர்கள், 1 தட்டச்சர் என மொத்தம் 45 பணியிடங்கள் புதிதாக குடிமைப் பொருள் வழங்கல் குற்றப்புலனாய்வுத் துறையில் உருவாக்கப்பட்டுள்ளன.

**4.2 (அ) 2023-ஆம் ஆண்டில் இத்துறையின் செயல்பாடுகள் :**

குடிமைப் பொருள் வழங்கல் குற்றப்புலனாய்வுத் துறை பொது விநியோகத் திட்டப் பொருட்கள் கடத்தல் மற்றும் பதுக்கலைத் தடுப்பதற்குப் பல்வேறு வகையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

2023-ஆம் ஆண்டு, 7,576 வழக்குகள் இத்துறையின் பல்வேறு அலகுகளில் பதியப்பட்டுள்ளன. இதில் 29,068 குவிண்டால் பொது விநியோகத் திட்ட அரிசி (மதிப்பு ரூ.1,64,23,420/-), 8,353 லிட்டர் பொது விநியோகத் திட்ட மண்ணெண்ணெய் (மதிப்பு ரூ.1,25,295/), மற்றும் 2,446 சமையல் எரிவாயு உருளைகள் (மதிப்பு ரூ.22,01,400/-) ஆகியவை கைப்பற்றப்பட்டுள்ளன. கைப்பற்றப்பட்ட பொருட்களின் மொத்த மதிப்பு

ரூ. 4,09,53,212/- ஆகும். இக்குற்றங்களில் ஈடுபட்ட 7,917 குற்றவாளிகள் கைது செய்யப்பட்டனர். பொது விநியோகத் திட்டப் பொருட்களைக் கடத்துவதற்குப் பயன்படுத்தப்பட்ட 1,685 வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. 2023-ஆம் ஆண்டு 2,361 வாகனங்கள் தீர்வு செய்யப்பட்டுள்ளன. பொது விநியோகத் திட்டப் பொருட்களைத் தொடர்ந்து கடத்திய குற்றத்திற்காக 53 குற்றவாளிகள் கள்ளச்சந்தை தடுப்பு மற்றும் இன்றியமையாப் பண்டங்கள் வழங்கல் பராமரிப்புச் சட்டம், 1980-இன் கீழ் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டனர்.

கலப்பட டீசல் மற்றும் கலப்பட எரிபொருட்கள் விற்பனையைத் தடுப்பதற்கும் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. 2023-ஆம் ஆண்டு 26 வழக்குகள் பதியப்பட்டு 3,24,760 லிட்டர்

கலப்படடீசல் / எரிபொருள் கைப்பற்றப்பட்டுள்ளது. மேலும், கலப்பட டீசல் மற்றும் எரிபொருட்கள் கடத்தலுக்குப் பயன்படுத்தப்பட்ட 28 வாகனங்களும் பறிமுதல் செய்யப்பட்டன.

**ஆ) ஜனவரி 2023 முதல் டிசம்பர் 2023 வரையிலான செயல்பாடுகளின் அட்டவணை :**

| வ. எண். | விவரம் | 01.01.2023 முதல் 31.12.2023 வரை | | |
|---|---|---|---|---|
| 1 | இன்றியமையாப் பொருட்கள் சட்டம், 1995- ன் பதிவு செய்யப்பட்ட வழக்குகள் | 7,576 | | |
| 2 | மொத்த கைப்பற்றுகை | வழக்குகளின் எண்ணிக்கை | கைப்பற்றுகை அளவு | மதிப்பு (ரூபாயில்) |
| | அ) பொது விநியோகத் திட்ட அரிசி (குவிண்டால்) | 6,067 | 29,068 | 1,64,23,420 |
| | ஆ) பொது விநியோகத் திட்ட மண்ணெண்ணெய் (லிட்டர்) | 39 | 8,353 | 1,25,295 |
| | இ) சமையல் எரிவாயு உருளைகள் (எண்ணிக்கை) | 1,394 | 2,446 | 22,01,400 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | ஈ) மற்றவை (மதிப்பு) ரூபாயில் | 76 | | - | | 2,22,03,097 |
| | உ) நெல் (கிலோ / மதிப்பு) | 0 | | 0 | | 0 |
| 3. | மொத்த கைப்பற்றுகையின் மதிப்பு (ரூபாயில்) | 4,09,53,212/- | | | | |
| 4. | கைது செய்யப்பட்டவர்கள் | 7,917 | | | | |
| 5. | கைப்பற்றப்பட்ட மொத்த வாகனங்கள் | 2 சக்கரம் | 3 சக்கரம் | 4 சக்கரம் | மற்றவை | மொத்தம் |
| | | 771 | 109 | 805 | 0 | 1,685 |
| 6. | தடுப்புக் காவல் சட்டம், 1980 கீழ் கைது செய்யப்பட்டவர்கள் | 53 | | | | |
| 7. | தீர்வு செய்யப்பட்ட வாகனங்களின் எண்ணிக்கை | 2 சக்கரம் | 3 சக்கரம் | 4 சக்கரம் | மற்றவை | மொத்தம் |
| | | 1,255 | 129 | 975 | 2 | 2,361 |
| கலப்பட டீசல் / ஆயில் | | | | | | |
| 8. | வழக்குகள் எண்ணிக்கை | | | 26 | | |
| 9. | கைப்பற்றுகை அளவு (லிட்டர்) | | | 3,24,760 | | |
| 10. | கைப்பற்றப்பட்ட மொத்த வாகனங்களின் எண்ணிக்கை | | | 28 | | |

**4.3 அ) 2024-ஆம் ஆண்டில் இத்துறையின் செயல்பாடுகள் (01.01.2024 முதல் 31.05.2024 வரை):**

01.01.2024 முதல் 31.05.2024 வரையிலான காலகட்டத்தில், 4,567 வழக்குகள் இத்துறையின் பல்வேறு அலகுகளில் பதியப்பட்டுள்ளன. இதில் 12,930 குவிண்டால் பொது விநியோகத் திட்ட அரிசி

(மதிப்பு ரூ. 73,05,450/-), 790 லிட்டர் பொது விநியோகத் திட்ட மண்ணெண்ணெய் (மதிப்பு ரூ. 11,850/-), மற்றும் 599 சமையல் எரிவாயு உருளைகள் (மதிப்பு ரூ. 5,39,100/-), ஆகியவை கைப்பற்றப்பட்டுள்ளன. கைப்பற்றப்பட்ட பொருட்களின் மொத்த மதிப்பு ரூ. 5,78,80,911/- ஆகும். இக்குற்றங்களில் ஈடுபட்ட 4,794 குற்றவாளிகள் கைது செய்யப்பட்டனர். பொது விநியோகத்திட்டப் பொருட்களைக் கடத்துவதற்குப் பயன்படுத்தப்பட்ட 701 வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. 807 வாகனங்கள் தீர்வு செய்யப்பட்டுள்ளன. பொது விநியோகத்திட்டப் பொருட்களைத் தொடர்ந்து கடத்திய குற்றத்திற்காக 40 குற்றவாளிகள் கள்ளச்சந்தை தடுப்பு மற்றும் இன்றியமையாப் பண்டங்கள் வழங்கல் பராமரிப்புச் சட்டம், 1980-இன் கீழ் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டனர்.

01.01.2024 முதல் 31.05.2024 வரையிலான காலகட்டத்தில் கலப்பட டீசல் / எரிபொருள் தொடர்பாக 13 வழக்குகள் பதியப்பட்டு 5,07,822 லிட்டர் கலப்பட டீசல் / எரிபொருள் கைப்பற்றப்பட்டது. கலப்பட டீசல் மற்றும் எரிபொருட்கள் கடத்தலுக்குப் பயன்படுத்தப்பட்ட 10 வாகனங்களும் பறிமுதல் செய்யப்பட்டன.

**ஆ) 01.01.2024 முதல் 31.05.2024 வரையிலான செயல்பாடுகளின் அட்டவணை :**

| வ. எண். | விவரம் | 01.01.2024 முதல் 31.05.2024 வரை | | |
|---|---|---|---|---|
| 1 | இன்றியமையாப் பொருட்கள் சட்டம், 1995 -ன் படி பதிவு செய்யப்பட்ட வழக்குகள் | 4,567 | | |
| | மொத்த கைப்பற்றுகை | வழக்குகளின் எண்ணிக்கை | கைப்பற்று கை அளவு | மதிப்பு (ரூபாயில்) |
| | அ) பொது விநியோகத் திட்ட அரிசி (குவிண்டால்) | 4,001 | 12,930 | 73,05,450 |
| 2 | ஆ) பொது விநியோகத் திட்ட மண்ணெண்ணெய் (லிட்டர்) | 7 | 790 | 11,850 |
| | இ) சமையல் எரிவாயு உருளைகள் (எண்ணிக்கை) | 526 | 599 | 5,39,100 |
| | ஈ) மற்றவை (மதிப்பு) ரூபாயில் | 33 | - | 5,00,24,511 |

<table>
<tr><td>3.</td><td>மொத்த கைப்பற்றுகையின் மதிப்பு (ரூபாயில்)</td><td colspan="5">5,78,80,911/-</td></tr>
<tr><td>4.</td><td>கைது செய்யப்பட்டவர்கள்</td><td colspan="5">4,794</td></tr>
<tr><td rowspan="2">5.</td><td rowspan="2">கைப்பற்றப்பட்ட மொத்த வாகனங்கள்</td><td>2 சக்கரம்</td><td>3 சக்கரம்</td><td>4 சக்கரம்</td><td>மற்றவை</td><td>மொத்தம்</td></tr>
<tr><td>344</td><td>30</td><td>327</td><td>0</td><td>701</td></tr>
<tr><td>6.</td><td>தடுப்புக் காவல் சட்டம், 1980 கீழ் கைது செய்யப்பட்டவர்கள்</td><td colspan="5">40</td></tr>
<tr><td rowspan="2">7.</td><td rowspan="2">தீர்வு செய்யப்பட்ட வாகனங்களின் எண்ணிக்கை</td><td>2 சக்கரம்</td><td>3 சக்கரம்</td><td>4 சக்கரம்</td><td>மற்றவை</td><td>மொத்தம்</td></tr>
<tr><td>403</td><td>23</td><td>381</td><td>0</td><td>807</td></tr>
<tr><td colspan="7">கலப்பட டீசல் / ஆயில்</td></tr>
<tr><td>8.</td><td>வழக்குகள் எண்ணிக்கை</td><td colspan="5">13</td></tr>
<tr><td>9.</td><td>கைப்பற்றுகை அளவு (லிட்டர்)</td><td colspan="5">5,07,822</td></tr>
<tr><td>10.</td><td>கைப்பற்றப்பட்ட மொத்த வாகனங்களின் எண்ணிக்கை</td><td colspan="5">10</td></tr>
</table>

# இயல் -5

## தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம்

### 5.1. முன்னுரை:

ஆற்றுநர்க்கு அளிப்போர்
அறவிலை பகர்வோர் ;
ஆற்றா மாக்கள்
அரும்பசி களைவோர்
மேற்றே உலகின்
மெய்நெறி வாழ்க்கை !
மண்டிணி ஞாலத்து
வாழ்வோர்க்கெல்லாம்
உண்டி கொடுத்தார்
உயிர்கொடுத்தோரே !

-மணிமேகலை

உலகில் வாழ்கின்றவர்க்கெல்லாம் உணவு கொடுத்தவரே உயிர் கொடுத்தவராவர் என்ற கூற்றிற்கேற்ப பொதுத்துறை நிறுவனங்களின் நிறுவன நாயகரான முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால்

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் 1972-ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டது. இந்நிறுவனம் பொது விநியோகத் திட்டத்திற்குத் தேவையான இன்றியமையா உணவுப் பொருட்களைக் கொள்முதல் செய்து, சேமித்து, விநியோகிக்கும் உன்னத பணிகளை 50 ஆண்டுகளுக்கு மேலாக மேற்கொண்டு வருகிறது.

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் நிறுவனங்கள் சட்டம், 1956 சட்டப்பிரிவு 25-ன் கீழ் (நிறுவனங்கள் சட்டம், 2013 சட்டப் பிரிவு 8) 01.04.2010 அன்று பதிவு செய்யப்பட்டு "ஆதாயம் இல்லை இழப்பு இல்லை" என்ற கோட்பாட்டில் செயல்பட்டு வருகிறது.


**5.2 நிறுவனத்தின் கட்டமைப்புகள்:**

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகமானது தலைமை அலுவலகம் மற்றும் 39 மண்டல அலுவலகங்களுடன் இயங்கி வருகிறது. இந்நிறுவனம்

11 இயக்குநர்கள் கொண்ட குழுமத் தலைமையின் கீழ் நிர்வகிக்கப்பட்டு வருகிறது. குழுமத்தின் தலைவராக அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அவர்கள் செயலாற்றி வருகிறார்.

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் 7,324 நிரந்தரப் பணியாளர்கள், தலைமை அலுவலகம், மண்டல அலுவலகங்கள், கிடங்குகள், நவீன அரிசி ஆலைகள், அமுதம் சில்லறை அங்காடிகள் மற்றும் அமுதம் பல்பொருள் அங்காடிகள், மண்ணெண்ணெய் வழங்கும் நிலையங்கள் பெட்ரோல்/ டீசல் / சமையல் எரிவாயு வழங்கும் நிலையங்களில் பணிபுரிந்து வருகிறார்கள். 8,329 பருவகாலப் பணியாளர்களும் நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் பணியாற்றி வருகிறார்கள். 4,384 சுமைதூக்கும் தொழிலாளர்களும்

30,538 பருவகால சுமைதூக்கும் தொழிலாளர்களும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் உள்ள கிடங்குகள், நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் மற்றும் நவீன அரிசி ஆலைகளில் பணிபுரிந்து வருகிறார்கள்.


குழும இயக்குநர்கள்
தலைவர்
நிர்வாக இயக்குனர்
இணை நிர்வாக இயக்குனர்
நிதி ஆலோசகர் (ம) முதன்மைக் கணக்கு அலுவலர்
முதுநிலை மேலாளர் (கணக்கு)
முதுநிலை மேலாளர் (தணிக்கை)
மேலாளர் (கணினி)
நிறும செயலர்
விழிப்பு பணி அலுவலர்
பொது மேலாளர் (போக்குவரத்து)
தலைமை கட்டுமான பொறியாளர்
பொது மேலாளர் (பொறியியல்)
முதுநிலை மேலாளர் (பொறியியல்)
பொது மேலாளர் (நிர்வாகம்)
பொது மேலாளர் (வாணிபம்)
பொது மேலாளர் (வர்த்தகம்)
பொது மேலாளர் (சந்தை)
முதுநிலை மேலாளர் (தரக்கட்டுப்பாடு)
39 மண்டலங்கள்
(முதுநிலை மண்டல மேலாளர்கள் / மண்டல மேலாளர்கள்)
நவீன அரிசி ஆலை (21)
திம்மாவரம்
கள்ளக்குறிச்சி
போளூர்
செய்யாறு
சிதம்பரம்
நெய்வேலி
திருநாகேஸ்வரம்
எருக்கூர்- I
எருக்கூர்- II
சித்தர்காடு
ஆக்கூர்
திருவாரூர்
சுந்தரக்கோட்டை
அம்மன்பேட்டை
பட்டுக்கோட்டை
அதவத்தூர்
மானாமதுரை
கடச்சனேந்தல்
பொள்ளாச்சி
தாழையூத்து
திருக்கோவிலூர்

## 5.3 நிறுவனத்தின் செயல்பாடுகள்:

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் முக்கிய செயல்பாடுகள்:-

அ) பரவலாக்கப்பட்ட கொள்முதல் முறையின் கீழ் இந்திய உணவுக் கழகத்தின் முகவராக தமிழ்நாடு விவசாயிகளிடமிருந்து நெல் மற்றும் கேழ்வரகு கொள்முதல் செய்தல்

ஆ) தரமான அரிசி, சர்க்கரை, கோதுமை, துவரம் பருப்பு, பாமாயில் மற்றும் மண்ணெண்ணெய் கொள்முதல் செய்து சேமித்து உரிய குடும்ப அட்டைதாரர்களுக்கு விநியோகம் செய்தல்

இ) தமிழ்நாடு அரசால் அவ்வப்பொழுது அறிவிக்கப்படுகிற மக்கள் நலத்திட்டங்களுக்கு உணவு மற்றும் இதர பொருட்களைக் கொள்முதல் செய்தல் சேமித்தல் மற்றும் விநியோகம் செய்தல்

ஈ) பேரிடர் காலங்களில் அரசு அறிவிக்கின்ற நிவாரணப் பொருட்களைக் கொள்முதல் செய்து, சேமித்து, அரசு வழிகாட்டுதல்களின்படி பொது மக்களுக்கு விநியோகித்தல் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் செயல்படும் பல்வேறு அலகுகள்:

அ) 18.08 இலட்சம் மெ.டன் கொள்ளளவு கொண்ட 367 கிடங்குகள்

ஆ) 18 இடங்களில் 2.83 இலட்சம் மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட மேற்கூரை அமைப்புடன் கூடிய 213 நெல் சேமிப்பு மையங்கள்

இ) 1,505 நியாயவிலைக் கடைகள் (முழுநேரக் கடைகள் 1,309 மற்றும் பகுதிநேரக் கடைகள் 196)

ஈ) 21 நவீன அரிசி ஆலைகள்

உ) 32 மாவட்டங்களில் 61 அம்மா அமுதம் பல்பொருள் அங்காடிகள்

ஊ) 19 அமுதம் பல்பொருள் அங்காடிகள் (சென்னை மற்றும் கடலூர் மாவட்டங்கள்)

எ) 3 பெட்ரோல் / டீசல் விற்பனை நிலையங்கள்

ஏ) 36 மண்ணெண்ணெய் விற்பனை நிலையங்கள்

ஐ) 4 சமையல் எரிவாயு விநியோக முகமைகள்

ஒ) 3,148 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள்

## 5.4 விவசாயிகளிடமிருந்து நெல்கொள்முதல் செய்தல்

சுழன்றும் ஏர்ப் பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை.

-திருவள்ளுவர்

பல தொழில்களைச் செய்து சுழன்று கொண்டிருக்கும் இந்த உலகம், ஏர்த்தொழிலின் பின்னேதான் சுற்ற வேண்டியிருக்கிறது. எனவே, எவ்வளவுதான் துன்பம் இருப்பினும் உழவுத் தொழிலே சிறந்தது என்று திருவள்ளுவரால் போற்றப்பட்டுள்ளது. இந்திய உணவுக் கழகத்தின் முகவராக தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் தமிழ்நாடு விவசாயிகளிடமிருந்து 01.10.2002 முதல் நெல் கொள்முதல் செய்து வருகிறது.

அனைத்து மண்டலங்களிலும் விவசாயிகளிடமிருந்து பெறப்படும் கோரிக்கையின் அடிப்படையில், நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் மாவட்ட ஆட்சியரிடம் ஆணை பெற்றுத் திறக்கப்பட்டு வருகின்றன. நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் சீராகச் செயல்படுவதற்கு மாநில அரசால் 2021-ஆம் ஆண்டில் வழிகாட்டு நெறிமுறைகள் வெளியிடப்பட்டு நெல் கொள்முதல், சேமிப்பு மற்றும் இயக்கப் பணிகள் அனைத்து மண்டலங்களிலும் நடைபெற்று வருகின்றன. நேரடி நெல் கொள்முதல் நிலையங்களின் ஒட்டுமொத்தச் செயல்பாட்டைக் கண்காணிக்க கீழ்க்கண்டவாறு மாவட்ட அளவிலான கண்காணிப்புக்குழு அமைக்கப்பட்டுள்ளது.

1. மாவட்ட ஆட்சியர் – தலைவர்
2. மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) – கூட்டுநர்

3. இணை இயக்குநர், வேளாண்மை.
4. முதுநிலை மண்டல மேலாளர் / மண்டல மேலாளர், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம்.
5. கூட்டுறவுச் சங்கங்களின் இணைப்பதிவாளர்.
6. விவசாயிகளின் பிரதிநிதிகள்-இருவர்.

மாவட்ட அளவிலான கண்காணிப்புக்குழு அந்தந்த மாவட்டங்களில் பெறப்படும் விவசாயிகளின் கோரிக்கைகளை உடனுக்குடன் பரிசீலித்து நேரடி நெல் கொள்முதல் மையங்கள் திறக்கப்பட்டு கொள்முதல் பணி செம்மைப்படுத்தப்பட்டு வருகிறது. ஒன்றிய அரசின் வழிகாட்டுதலின்படி, கூட்டுறவு நிறுவனங்கள் டெல்டா அல்லாத மண்டலங்களில் நேரடி நெல் கொள்முதல் செய்து வருகிறது.

நேரடி நெல் கொள்முதல் நிலையங்களின் செயல்பாட்டை மேலும், திறம்படச் செயல்படுத்திட

விழிப்புணர்வு அறிவிப்புப் பலகை பின்வரும் தகவல்களுடன் வைக்கப்பட்டுள்ளது.

1) நெல்லினை விற்பனை செய்திட யாருக்கும் லஞ்சம் கொடுக்கக்கூடாது.
2) எவரேனும் லஞ்சம் கேட்டால் உரிய அலுவலர்களுக்கு உடன் புகார் அளிக்க வேண்டும்.
3) விவசாயிகள் நேரடி நெல் கொள்முதல் நிலையத்திற்குச் சென்று www.tncsc-edpc.in என்ற இணைய தளத்தில் முன்பதிவு செய்து கொள்ள வேண்டும்.
4) நெல்லினைத் தூற்றி சுத்தம் செய்து ஈரப்பதம் 17 சதவீதத்திற்கு மிகாமல் கொண்டுவர வேண்டும்.

5) டோக்கனில் தெரிவிக்கப்பட்டுள்ள நாளில் மட்டும் நெல்லினை விற்பனைக்கு கொண்டுவர வேண்டும்.

6) மேலும், விவரங்களுக்கு மாநில உழவர் உதவி மைய 1800 599 3540 கட்டணமில்லா தொலைபேசி எண்ணைத் தொடர்பு கொள்ளவும்.

மேற்கண்டவை தவிர, அனைத்து நேரடி கொள்முதல் நிலையங்களிலும் புகார் பெட்டிகள் வைக்கப்பட்டுள்ளன. அதில் விவசாயிகள் தங்கள் புகார்களைத் தெரிவிக்கலாம்.

**5.5 உழவர் குறை தீர்க்கும் மையம்:**

உழவர்கள் நெல் கொள்முதல் தொடர்பான குறைகளைத் தெரிவிக்க உழவர் உதவி மையம் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத் தலைமை அலுவகத்தில் அமைக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில்

உள்ள உழவர்கள் தங்களது குறைகளை 1800 599 3540 என்ற கட்டணமில்லாத் தொலைபேசி எண்ணில் தொடர்பு கொண்டு உரிய தகவல்கள் பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது. கொள்முதல் பருவம் 2023-2024-ஆம் ஆண்டில் 477 எண்ணிக்கையிலான அழைப்புகள் பெறப்பட்டுத் தீர்வு காணப்பட்டுள்ளன.

**5.6 குறைந்தபட்ச ஆதார விலை :**

தாளாற்றித் தந்த பொருளெல்லாந் தக்கார்க்கு
வேளாண்மை செய்தற் பொருட்டு.

-திருவள்ளுவர்

தகுதியுடையோர் நலனுக்கு உதவிடும் பொருட்டு ஒருவன் முயன்று திரட்டிய பொருள் பயன்பட வேண்டும் என்ற வள்ளுவரின் கூற்றுக்கு ஏற்ப, நெற்றி வியர்வை நிலத்தில் சிந்தி உழைத்திடும் விவசாயிகளின் விளை பொருட்களை, அவர்களிடமிருந்து குறைந்தபட்ச ஆதாரவிலையோடு கூடிய ஊக்கத்தொகையுடன் தமிழ்நாடு அரசு கொள்முதல் செய்து, பொது விநியோகத்

திட்டத்தின் மூலம் பொது மக்களுக்கு வழங்கி, விளை பொருட்களை உற்பத்தி செய்த உழவர்களுக்கு உரிய பலன் கிடைக்கச் செய்கிறது.

ஒன்றிய அரசு மற்றும் மாநில அரசு கடந்த கே.எம்.எஸ் (காரிஃப் கொள்முதல் பருவம்) 2011 – 2012 முதல் விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட குறைந்தபட்ச ஆதார விலை மற்றும் ஊக்கத் தொகை விவரம் பின்வருமாறு:-

(ஒரு குவிண்டால் ரூபாயில்)

| வ. எண் | கே.எம்.எஸ் (கொள் முதல் பருவம்) | குறைந்தபட்ச ஆதார விலை | | மாநில அரசு ஊக்க தொகை | | ஆக மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|---|
| | | சன்ன ரகம் | பொது ரகம் | சன்ன ரகம் | பொது ரகம் | சன்ன ரகம் | பொது ரகம் |
| 1 | 2011-2012 | 1110 | 1080 | 70 | 50 | 1180 | 1130 |
| 2 | 2012-2013 | 1280 | 1250 | 70 | 50 | 1350 | 1300 |
| 3 | 2013-2014 | 1345 | 1310 | 70 | 50 | 1415 | 1360 |
| 4 | 2014-2015 | 1400 | 1360 | 70 | 50 | 1470 | 1410 |
| 5 | 2015-2016 | 1450 | 1410 | 70 | 50 | 1520 | 1460 |
| 6 | 2016-2017 | 1510 | 1470 | 70 | 50 | 1580 | 1520 |
| 7 | 2017-2018 | 1590 | 1550 | 70 | 50 | 1660 | 1600 |
| 8 | 2018-2019 | 1770 | 1750 | 70 | 50 | 1840 | 1800 |
| 9 | 2019-2020 | 1835 | 1815 | 70 | 50 | 1905 | 1865 |
| 10 | 2020-2021 | 1888 | 1868 | 70 | 50 | 1958 | 1918 |
| 11 | 2021-2022 | 1960 | 1940 | 100 | 75 | 2060 | 2015 |
| 12 | 2022-2023 | 2060 | 2040 | 100 | 75 | 2160 | 2115 |

2023-2024-க்கு ஒன்றிய அரசு நிர்ணயம் செய்துள்ள குறைந்தபட்ச ஆதார விலை மற்றும் மாநில அரசு வழங்கும் ஊக்கத் தொகையுடன் 01.09.2023 முதல் நெல் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது. அதன் விவரம் கீழ்க்கண்டவாறு.

| நெல் ரகம் | ஒன்றிய அரசின் குறைந்தபட்ச ஆதார விலை (குவிண்டால் ஒன்றிற்கு) | தமிழ்நாடு அரசு வழங்கும் ஊக்கத் தொகை (குவிண்டால் ஒன்றிற்கு) | விவசாயிகளுக்கு வழங்கப்படும் கொள்முதல் தொகை (குவிண்டால் ஒன்றிற்கு) |
|---|---|---|---|
| **சன்ன ரகம்** | 2,203/- | 107/- | 2,310/- |
| பொது ரகம் | 2,183/- | 82/- | 2,265/- |

**5.7 கே.எம்.எஸ். (காரிஃப் கொள்முதல் பருவம்) 2023-2024 நெல் கொள்முதல் விவரம்** :

நடைமுறையில் ஆண்டு தோறும் கே.எம்.எஸ். கொள்முதல் பருவமானது அக்டோபர் மாதம்1-ம் தேதி முதல் அடுத்த ஆண்டு செப்டம்பர் 30-ம் தேதி வரை கடைபிடிக்கப்பட்டு வந்தாலும் விவசாயப் பெருங்குடி

மக்களின் வேண்டுகோளின் அடிப்படையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் விடுத்த கோரிக்கையினை ஏற்று பரவலாக்கப்பட்ட நெல் கொள்முதல் பணியினைச் செப்டம்பர் முதல் நாளே மேற்கொள்ள ஒன்றிய அரசு கடந்த காரிஃப் பருவம் 2022-2023 முதல் அனுமதி வழங்கி வருகிறது.

கே.எம்.எஸ். 2023-2024-ல் மண்டல வாரியாக திறக்கப்பட்ட நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் மற்றும் கொள்முதல் செய்யப்பட்ட நெல்லின் விவரம் பின்வருமாறு:-

| கே.எம்.எஸ் 2023–24 | | | | | (மெ.டன்னில்) |
|---|---|---|---|---|---|
| வ. எண் | மண்டலங்கள் | திறக்கப்பட்ட கொள்முதல் நிலையங்களின் எண்ணிக்கை | நெல் (சன்ன ரகம்) | நெல் (பொது ரகம்) | கொள்முதல் செய்யப்பட்ட நெல் |
| 1 | அரியலூர் | 51 | 26734 | 29495 | 56229 |
| 2 | செங்கல்பட்டு | 180 | 181584 | 24620 | 206204 |
| 3 | கோயம்புத்தூர் | 2 | 511 | 58 | 569 |
| 4 | கடலூர் | 250 | 99027 | 79529 | 178556 |
| 5 | திண்டுக்கல் | 13 | 8317 | 465 | 8782 |
| 6 | ஈரோடு | 62 | 41809 | 28225 | 70034 |
| 7 | கள்ளக்குறிச்சி | 22 | 9973 | 7011 | 16984 |
| 8 | காஞ்சிபுரம் | 156 | 111689 | 24279 | 135968 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 9 | கன்னியாகுமரி | 10 | 26 | 4023 | 4049 |
| 10 | கரூர் | 8 | 2536 | 1316 | 3852 |
| 11 | மதுரை | 80 | 41320 | 2659 | 43979 |
| 12 | மயிலாடுதுறை | 174 | 201761 | 5925 | 207686 |
| 13 | நாகப்பட்டினம் | 176 | 175189 | 69088 | 244277 |
| 14 | நாமக்கல் | - | - | - | - |
| 15 | பெரம்பலூர் | 18 | 14970 | 1161 | 16131 |
| 16 | புதுக்கோட்டை | 128 | 27230 | 37704 | 64934 |
| 17 | இராமநாதபுரம் | 60 | 10724 | 44 | 10768 |
| 18 | இராணிப்பேட்டை | 80 | 38818 | 6934 | 45752 |
| 19 | சேலம் | 8 | 5469 | 350 | 5819 |
| 20 | சிவகங்கை | 60 | 27976 | 11 | 27987 |
| 21 | தென்காசி | 36 | 17138 | 3080 | 20218 |
| 22 | தஞ்சாவூர் | 561 | 329183 | 186524 | 515707 |
| 23 | தேனி | 15 | 5567 | 0 | 5567 |
| 24 | திருச்சிராப்பள்ளி | 68 | 32224 | 19992 | 52216 |
| 25 | திருநெல்வேலி | 72 | 27119 | 7498 | 34617 |
| 26 | திருவள்ளூர் | 81 | 57229 | 10552 | 67781 |
| 27 | திருவண்ணாமலை | 91 | 34128 | 20242 | 54370 |
| 28 | திருவாரூர் | 532 | 418365 | 197546 | 615911 |
| 29 | தூத்துக்குடி | 5 | 1537 | 549 | 2086 |
| 30 | திருப்பத்தூர் | - | - | - | - |
| 31 | திருப்பூர் | 12 | 3446 | 630 | 4076 |
| 32 | வேலூர் | 6 | 522 | 807 | 1329 |
| 33 | விழுப்புரம் | 98 | 56745 | 32456 | 89201 |
| 34 | விருதுநகர் | 33 | 12293 | 2929 | 15222 |
| மொத்தம் | | 3,148 | 20,21,159 | 8,05,702 | 28,26,861 |

**கே.எம்.எஸ்.** (காரிஃப் **கொள்முதல்** பருவம்) 2023-2024 **மொத்த நெல் கொள்முதல்** 31.05.2024 **வரை** :

| கே.எம். எஸ் | திறக்கப்பட்ட நேரடி நெல் கொள்முதல் நிலையங்களின் எண்ணிக்கை | கொள்முதல் செய்யப்பட்ட நெல் அளவு சன்னரகம் (மெ.டன்னில்) | கொள்முதல் செய்யப்பட்ட நெல் அளவு பொது ரகம் (மெ.டன்னில்) | மொத்த நெல் கொள்முதல் (மெ.டன்னில்) | குவிண்டால் ஒன்றின் விலை | | பயனடைந்த விவசாயிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | சன்ன ரகம் (ரூபாயில்) | பொது ரகம் (ரூபாயில்) | |
| 2023-24 (31.05.2024 வரை) | **3,148** | **20,21,159** | **8,05,702** | **28,26,861** | **2,310** | **2,265** | **3,65,181** |

நடப்பு நெல் கொள்முதல் பருவம் 2023-2024-இல் 31.05.2024 வரை விவசாயிகளுக்கு மின்னணு முறையில் ரூ.6,211.46 கோடி மற்றும் ஊக்கத் தொகையாக ரூ.282.33 கோடி வழங்கப்பட்டுள்ளது.

### 5.7.1 நடப்பு காரிஃப் பருவம் 2023-2024 கொள்முதல் விவரம் (கே.எம்.எஸ். 2023-24) (01.09.2023 முதல் 31.05.2024 வரை)

(மெ.டன்னில்)

| | |
|---|---|
| தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் | 26,04,017 |
| தேசிய கூட்டுறவு நுகர்வோர் இணையம் | 2,22,379 |
| கூட்டுறவுத் துறை | 465 |
| மொத்த நெல் கொள்முதல் | 28,26,861 |

**5.7.2 கடந்த காரிஃப் பருவங்களில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், கூட்டுறவுத் துறை மற்றும் இந்திய தேசிய கூட்டுறவு நுகர்வோர் இணையம் (NCCF) மூலம் நெல் கொள்முதல் செய்யப்பட்ட விவரங்கள் பின்வருமாறு:-**

(மெ.டன்னில்)

| வ. எண். | காரிஃப் பருவம் | தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் | கூட்டுறவு | தேசிய கூட்டுறவு நுகர்வோர் இணையம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 1 | 2011-2012 | 2340227 | 46864 | - | 2387091 |
| 2 | 2012-2013 | 718717 | - | - | 718717 |
| 3 | 2013-2014 | 1020425 | 298 | - | 1020723 |
| 4 | 2014-2015 | 1575567 | 4447 | - | 1580014 |
| 5 | 2015-2016 | 1783798 | 649 | - | 1784447 |
| 6 | 2016-2017 | 211360 | - | 315 | 211675 |
| 7 | 2017-2018 | 1485527 | 4926 | 2917 | 1493370 |
| 8 | 2018-2019 | 1880483 | 11727 | 18455 | 1910665 |
| 9 | 2019-2020 | 3133757 | 17576 | 89850 | 3241183 |
| 10 | 2020-2021 | 4318921 | 26491 | 149200 | 4494612 |
| 11 | 2021-2022 | 4275036 | 52509 | 71 | 4327616 |
| 12 | 2022-2023 | 3968071 | 300 | 453957 | 4422328 |

5.8 **நவீன அரிசி ஆலைகள்** :

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்குச் சொந்தாமன 21 நவீன அரிசி ஆலைகள் 52, 500 மெ.டன் மாதாந்திர அரவைத் திறனுடன் இயங்கி வருகின்றன. இவற்றில் 15 நவீன அரிசி ஆலைகளில் புழுங்கல் அரிசியும், 6 நவீன அரிசி ஆலைகளில் பச்சரிசியும் அரவை செய்யப்படுகிறது. பொது விநியோகத் திட்டத்தின் கீழ் பொதுமக்களுக்குத் தரமான அரிசி வழங்க 21 நவீன அரிசி ஆலைகளிலும் கலர் சார்ட்டெர் இயந்திரங்கள் பொறுத்தப்பட்டுள்ளன. நவீன அரிசி ஆலைகளின் விவரம் பின்வருமாறு:-

கீழ்க்கண்ட நவீன அரிசி ஆலைகளின் மாதாந்திர அரவைத் திறன் 2500 மெ.டன் ஆகும்.

**புழுங்கல் அரிசி அரவை செய்யும் நவீன அரிசி ஆலைகள்:-**

| வ. எண் | மண்டலம் | நவீன அரிசி ஆலைகள் |
|---|---|---|
| 1 | மயிலாடுதுறை | எருக்கூர் பகுதி I |
| 2 | | எருக்கூர் பகுதி II |
| 3 | | சித்தர்காடு |
| 4 | தஞ்சாவூர் | அம்மன்பேட்டை |
| 5 | | திருநாகேஸ்வரம் |
| 6 | | பட்டுக்கோட்டை |
| 7 | திருவாரூர் | திருவாரூர் |
| 8 | | சுந்தரக்கோட்டை |
| 9 | கடலூர் | நெய்வேலி |
| 10 | திருவண்ணாமலை | போளூர் |
| 11 | திருச்சிராப்பள்ளி | அதவத்தூர் |
| 12 | மதுரை | கடச்சனேந்தல் |
| 13 | சிவகங்கை | மானாமதுரை |
| 14 | திருநெல்வேலி | தாழையூத்து |
| 15 | செங்கல்பட்டு | திம்மாவரம் |

**பச்சரிசி அரவை செய்யும் நவீன அரிசி ஆலைகள்:**

| வ.எண் | மண்டலம் | நவீன அரிசி ஆலைகள் |
|---|---|---|
| 1 | மயிலாடுதுறை | ஆக்கூர் |
| 2 | கடலூர் | சிதம்பரம் |
| 3 | திருவண்ணாமலை | செய்யாறு |
| 4 | கோயம்புத்தூர் | பொள்ளாச்சி |
| 5 | கள்ளக்குறிச்சி | கள்ளக்குறிச்சி |
| 6 | விழுப்புரம் | திருக்கோவிலூர் |

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் 653 அரவை முகவர்கள் 10,97,606 மெ.டன் மாதாந்திர அரவைத் திறனுடன் நெல் அரவை செய்து வருகின்றனர். மேலும், அரிசியின் தரத்தை மேம்படுத்தும் வகையில், அனைத்து நவீன அரிசி ஆலைகளிலும் கலர் சார்ட்டர் இயந்திரங்கள் நிறுவப்பட்டு பொதுமக்கள் மகிழும் வண்ணம் தரமான அரிசி வழங்கப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தால் நியமனம் செய்யப்பட்ட அரவை முகவர்கள் மற்றும் அவர்களின் அரவைத் திறன் பின்வருமாறு:-

| விவரங்கள் | அரவை முகவர்களின் எண்ணிக்கை | | | அரவை திறன் (மெ.டன்னில்) | | |
|---|---|---|---|---|---|---|
| | புழுங்கல் அரிசி | பச்சரிசி | மொத்தம் | புழுங்கல் அரிசி | பச்சரிசி | மொத்தம் |
| நிரந்தர அரவை முகவர்கள் | 403 | 250 | 653 | 6,66,341 | 4,31,265 | 10,97,606 |

அரவை முகவர்களை நியமிக்கும்போது பின்வரும் வழிகாட்டுதல்கள் பின்பற்றப்படுகின்றன.

அரிசி ஆலைகளை வைத்திருக்கும் நபர்கள் அல்லது நிறுவனங்கள் அல்லது அரிசி ஆலைகளில் குத்தகை அல்லது அடமான உரிமைகள் உள்ளவர்கள் தினசரி 10 மெ.டன் நெல் மற்றும் அதற்கு மேல் அரவை செய்யும் திறன் கொண்டவர்கள் மட்டுமே கழகத்தில் அரவை முகவர்களாக நியமிக்கத் தகுதியுடைவர்கள்.

அரவை முகவர்கள் வைத்திருக்கும் அரவைத் திறனைக் கொண்டு பாதுகாப்பு வைப்புத் தொகை மதிப்பிடப்படும். அரவை முகவர் அளிக்கும் வங்கி உத்திரவாதத்திற்கும் பாதுகாப்பு வைப்புத் தொகைக்கும் (வரைவோலை) வட்டி எதுவும் செலுத்தப்படமாட்டாது.

அரவை முகவர்களுக்கான நெல் ஒதுக்கீடு திருப்திகரமான செயல்பாட்டிற்கு உட்பட்டு அரவை

முகவர் முந்தைய ஒதுக்கீடுகளுக்குச் செலுத்த வேண்டிய முழு அரிசியையும் செலுத்தியிருக்க வேண்டும். அத்தகைய நெல் விடுவிப்பு அரவை முகவர் அளிக்கும் வங்கி உத்திரவாதத்திற்கும் பாதுகாப்பு வைப்புத் தொகைக்கும் 90% மிகாமல் இருக்க வேண்டும். மேற்கூறிய விவரங்கள் நெல் சோதனை அட்டை மூலம் கண்காணிக்கப்படும்.

இந்திய அரசால் அவ்வப்போது நிர்ணயிக்கப்பட்ட அளவின்படி அரவை செய்யப்பட்ட கண்டுமுதல் அரிசியை அரவை முகவர் வழங்க வேண்டும். தற்போது ஒன்றிய அரசு அரவை முகவர்களுக்கு வழங்கப்படும் நெல்லில் முறையே 68% புழுங்கலரிசி மற்றும் 67% பச்சரிசி ஒப்படைப்பு செய்யப்பட வேண்டும் என அளவு நிர்ணயித்துள்ளது.

அரவை முகவர்கள் பின்வருவனவற்றின்படி கண்டுமுதல் அரிசியை ஒப்படைக்க வேண்டும். அரிசி ஒப்படைப்பதில் தாமதம் ஏற்பட்டால் அபராதம் விதிக்கப்படும்.

| 15 கிடங்கு வேலை நாட்கள் | அபாரதம் இல்லை |
|---|---|
| 15 கிடங்கு வேலை நாட்கள் முதல் 21 கிடங்கு வேலை நாட்கள் வரை | ரூ. 1 வீதம் /மெ.டன் /கிடங்கு வேலை நாட்கள் |
| 21 கிடங்கு வேலை நாட்கள் முதல் 45 கிடங்கு வேலை நாட்கள் வரை | ரூ. 2 வீதம்/ மெ.டன்/ கிடங்கு வேலை நாட்கள் |
| 45 கிடங்கு வேலை நாட்கள் முதல் 60 கிடங்கு வேலை நாட்கள் வரை | ரூ. 3 வீதம் /மெ.டன் /கிடங்கு வேலை நாட்கள் |
| 60 கிடங்கு வேலை நாட்கள் முதல் 75 கிடங்கு வேலை நாட்கள் வரை.<br>75 கிடங்கு வேலை நாட்களுக்கு மேல் அரவை செய்யப்பட்ட அரிசி ஒப்படைப்பு செய்யவில்லை என்றால் தலைமை அலுவலகத்திற்கு மேல் நடவடிக்கைக்காக அனுப்பப்படும். | ரூ. 6 வீதம் /மெ.டன் /கிடங்கு வேலை நாட்கள் |

அனைத்து அரவை முகவர்களின் நியமனங்களும் தலைமை அலுவலகத்திலிருந்து முன் அனுமதி பெற்ற பிறகே சம்மந்தப்பட்ட மண்டலங்களின் முதுநிலை மண்டல மேலாளர்கள் / மண்டல மேலாளர்களால் செய்யப்படுகின்றன.

## 5.9 கொள்முதல் செய்யப்படும் இன்றியமையாப் பொருட்கள்:

### 5.9.1 அரிசி :

தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டம், 2013-ன் கீழ் மத்தியத் தொகுப்பு ஒதுக்கீட்டிலிருந்து பெறப்படும் அரிசியினை இந்திய உணவுக் கழகத்தின் மூலம் பெற்றும் அரவை செய்து பெறப்படும் கண்டுமுதல் அரிசியினைப் பெற்றும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், பொது விநியோகத் திட்டத்திற்கு வழங்கி வருகிறது. 01.04.2023 முதல் செறிவூட்டப்பட்ட அரிசியினைப் பொது விநியோகத் திட்டத்திற்கும்

(AAY, PHH) ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டத்திற்கும் மதிய உணவுத் திட்டத்திற்கும் விநியோகிக்கப்படுகிறது.

தமிழ்நாட்டின் பொதுவிநியோகத் திட்டத்திற்கும் இதர அரசு நலத்திட்டங்களுக்கும் சராசரியாக மாதத்திற்கு 3.73 இலட்சம் மெட்ரிக் டன் அரிசி வழங்கப்படுகிறது. ஒன்றிய அரசு மாதத்திற்கு 2.97 இலட்சம் மெ.டன் செறிவூட்டப்பட்ட அரிசியினை NFSA (Targeted PDS)ன் கீழ் AAY, PHH மற்றும் Tide over பிரிவின் கீழ் தமிழ்நாடு பொது விநியோகத் திட்டத்திற்கு ஒதுக்குகிறது. ஒன்றிய அரசின் மாதாந்திர வரையறுக்கப்பட்ட பொது விநியோகத் திட்டத்தின் ஒதுக்கீட்டிற்கும் மற்றும் தமிழகத்தில் செயல்படுத்தப்பட்டு வரும் பொது விநியோகத்திட்ட நுகர்விற்கும் இடையேயான பற்றாக்குறையைப் பூர்த்தி

செய்வதற்காக, வெளிச் சந்தை விற்பனைத் திட்டத்தின் கீழ் தேசிய கூட்டுறவு நுகர்வோர் கூட்டமைப்பு இந்தியா லிமிடெட் (NCCF) மூலம் கூடுதலாக 61,500 மெட்ரிக் டன் அரிசியைக் கொள்முதல் செய்ய தமிழ்நாடு அரசு அனுமதித்துள்ளது.

இந்திய அரசின் ஒதுக்கீட்டின்படி 70:30 என்ற விகிதத்தில் புழுங்கலரிசி மற்றும் பச்சரிசியை இந்திய உணவுக் கழகம் தர்மபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களைத் தவிர (25:75 என்ற விகிதத்தில் புழுங்கலரிசி மற்றும் பச்சரிசியை) தமிழ்நாடு மாநிலத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களுக்கும் வழங்குகிறது.

### 5.9.2 **கோதுமை :**

கங்கை நதிப்புறத்துக் கோதுமைப் பண்டம்
காவிரி வெற்றிலைக்கு மாறு கொள்ளுவோம்
-பாரதியார்

தமிழ்நாட்டில், சென்னை மாநகரம் மற்றும் மாவட்டத் தலைமையகத்தில் உள்ள குடும்ப அட்டைதாரர்களுக்கு 10 கிலோ கோதுமையும், இதர பகுதிகளில் 5 கிலோ கோதுமையும் அரிசிக்குப் பதிலாக நியாய விலைக் கடைகளில் பெற்றுக்கொள்ளலாம். தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டம், 2013-ன்படி தமிழ்நாட்டிற்கு மாதந்தோறும் இந்திய அரசு 8,576.030 மெட்ரிக் டன் ஒதுக்குகிறது.

ஒன்றிய அரசின் மாதாந்திர வரையறுக்கப்பட்ட பொது விநியோகத் திட்டத்தின் ஒதுக்கீட்டிற்கும் தமிழ் நாட்டில் செயல்படுத்தப்பட்டு வரும் அனைவருக்குமான பொது விநியோகத்திட்ட

நுகர்விற்கும் இடையேயான பற்றாக்குறையைப் பூர்த்தி செய்வதற்காக, வெளிச் சந்தை விற்பனைத் திட்டத்தின் கீழ் தேசியக் கூட்டுறவு நுகர்வோர் கூட்டமைப்பு இந்தியா லிமிடெட் (NCCF) மூலம் 8,500 மெட்ரிக் டன் கோதுமையை வெளிச் சந்தையில் இருந்து கொள்முதல் செய்திட தமிழ்நாடு அரசு அனுமதி அளித்துள்ளது.

### 5.9.3 கேழ்வரகு :

கருங்கால் வரகே இருங்கதிர்த் தினையே
சிறுகொடிக் கொள்ளே பொறிகிளர் அவரையொடு
இந்நான் கல்லது உணாவும் இல்லை

-புறநானுறு- (பாடல் 355: 1-3)

கருப்பு நிறத்தை அடித்தாள்களில் கொண்ட வரகு, பெரிய கதிர்களை உடைய தினை, சிறிய கொடிகளில் விளையும் கொள், புள்ளிகள் போன்று தோன்றும் விதைகளை உடைய அவரை என்ற நான்கும் அல்லாமல் உணவுப் பொருள் வேறு இல்லை.

பரவலாக்கப்பட்ட கொள்முதல் திட்டத்தின் கீழ் கேழ்வரகு கொள்முதல் திட்டத்தினை விரிவுப்படுத்தும் நோக்கத்தோடு நடப்பு காரிஃப் பருவம் 2023-2024-ல் தருமபுரி, கிருஷ்ணகிரி, ஈரோடு மற்றும் சேலம் மாவட்டங்களில் 31.08.2024 வரை நேரடி கேழ்வரகு கொள்முதல் நிலையங்களைத் திறந்து இந்திய அரசால் நிர்ணயிக்கப்பட்ட குறைந்தபட்ச ஆதரவு விலையான ஒரு மெட்ரிக்டன்னிற்கு ரூ.38,460/- என்ற விலையில் விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்ய அரசால் அனுமதிக்கப்பட்டது. அதன்படி, நேரடி கேழ்வரகு கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு, 29.02.2024 வரையில் விவசாயிகளிடமிருந்து 405.000 மெ.டன். கேழ்வரகு கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

**5.9.4 சர்க்கரை:**

தமிழ்நாட்டில் குடும்ப அட்டைதாரர்களுக்குப் பொது விநியோகத் திட்டத்தின் கீழ் சர்க்கரை

வழங்கப்பட்டு வருகிறது. 2013-ஆம் ஆண்டிலிருந்து தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் தமிழ்நாடு கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளிலிருந்து சர்க்கரையைக் கொள்முதல் செய்து குடும்ப அட்டைதாரர்களுக்கு விநியோகித்து வருகிறது. சராசரியாக மாதாந்திர ஒதுக்கீடு 34,066 மெட்ரிக் டன் ஆகும். அந்தியோதயா அன்னயோஜனா குடும்ப அட்டைகளுக்கு (AAY) சர்க்கரையின் மானிய விலை ஒரு கிலோவுக்கு ரூ.13.50 ஆகவும், இதர குடும்ப அட்டைதாரர்களுக்குச் சர்க்கரை விலை ஒரு கிலோவுக்கு ரூ.25/- ஆகவும் வழங்கப்படுகிறது. விற்பனை விலை போக மீதித் தொகைக்கான செலவு மாநில அரசால் ஏற்கப்படுகிறது.

### 5.9.5 சிறப்புப் பொது விநியோகத் திட்டம்:

வெளிச்சந்தையில் விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்தும் நோக்கத்துடனும் ஊட்டச்சத்து பொருட்கள் வழங்கிடும் நோக்குடன் 14.04.2007 முதல் சிறப்புப் பொது விநியோகத் திட்டத்தின் கீழ் துவரம் பருப்பு மற்றும் செறிவூட்டப்பட்ட பாமாயில் ஆகியவை அனைத்துக் குடும்ப அட்டைதாரர்களுக்கும் வழங்கப்பட்டு வருகிறது.

குடும்ப அட்டைதாரர்களுக்குச் சிறப்புப் பொது விநியோகத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் துவரம் பருப்பின் மாதத் தேவை 20,000 மெட்ரிக் டன், பாமாயில் மாதத் தேவை 2 கோடி லிட்டர் ஆகும். அதன்படி, தேவைப்படும் பருப்பு மற்றும் பாமாயில் தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப் புள்ளிச் சட்டம், 1998 மற்றும் விதிகள், 2000-இன்படி இணையதள வழியில் ஒப்பந்தப்

புள்ளிகள் பெற்றுக் கொள்முதல் செய்யப்படுகிறது. ஒவ்வொரு குடும்ப அட்டைதாரர்களுக்கும் தலா ஒரு கிலோ துவரம் பருப்பு ரூ.30/- என்ற விலையிலும் பாமாயில் ஒரு லிட்டர் ரூ.25/- என்ற விலையிலும் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. விற்பனை விலை போக கூடுதலாக ஏற்படும் செலவினத்தை தமிழ்நாடு அரசு மானியமாக வழங்குகிறது.

| விவரம் | மாதாந்திர ஒதுக்கீடு பருப்பு (மெ.டன்னில்) மற்றும் பாமாயில் (பாக்கெட்டுகளில்) | குடும்ப அட்டை தாரர்களுக்கு வழங்கப்படும் அளவு | விற்பனை விலை பருப்பு/ கிலோ மற்றும் பாமாயில் பாக்கெட்/ லிட்டர் |
|---|---|---|---|
| துவரம் பருப்பு / கனடா மஞ்சள் பருப்பு | 20,000 | 1 கிலோ | ரூ.30/- |
| செறிவூட்டப்பட்ட பாமாயில் | 2,00,00,000 | 1 லிட்டர் (910 கிராம்) | ரூ.25/- |

**5.10 கிடங்குகள்:**

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மொத்தம் 385 கிடங்குகளை நிர்வகிக்கிறது. இவற்றில் 16.39 இலட்சம் மெட்ரிக் டன் சேமிப்பு மற்றும் கையாளும் திறன் கொண்ட 298 கிடங்குகள் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்குச் சொந்தமானவை; மீதமுள்ள 87 கிடங்குகள் 4.53 இலட்சம் மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்டவை, மத்திய சேமிப்புக் கிடங்குக் கழகம், தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம், கூட்டுறவு நிறுவனங்கள் மற்றும் பிற தனியார் நிறுவனங்களிடமிருந்து சேமிப்புக்காக வாடகைக்கு எடுக்கப்பட்டுள்ளன. பொது விநியோகத் திட்டத்திற்காக பொருள்களைப் பாதுகாப்பாகச் சேமிப்பதை உறுதி செய்வதற்காக சேமிப்பு வசதிகளை வலுப்படுத்த, இக்கழகத்தால் தொடர்ந்து பல நடவடிக்கைகள்

எடுக்கப்பட்டு வருகின்றன. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் பயன்பாட்டில் உள்ள கிடங்குகளின் விவரம் பின்வருமாறு:-

| வ. எண் | விவரம் | செயல்முறை கிடங்குகள் | | கூடுதல் கிடங்குகள் | | பகுதி மேற்கூரை கிடங்குகள் | | மொத்த கிடங்குகள் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | எண்ணிக்கை | கொள்ளளவு (மெ.டன்னில்) | எண்ணிக்கை | கொள்ளளவு (மெ.டன்னில்) | எண்ணிக்கை | கொள்ளளவு (மெ.டன்னில்) | எண்ணிக்கை | கொள்ளளவு (மெ.டன்னில்) |
| 1 | சொந்த கட்டடம் | 223 | 782793 | 57 | 573585 | 18 | 282750 | 298 | 1639128 |
| 2 | வாடகை கட்டடம் (தனியார்) | 11 | 25300 | 2 | 19000 | - | - | 13 | 44300 |
| 3 | வாடகை கட்டடம் (கூட்டுறவுத் துறை) | 2 | 13500 | 23 | 90094 | - | - | 25 | 103594 |
| 4 | வாடகை கட்டடம் (த.நா.சேமிப்பு கிடங்கு) | 15 | 66916 | 26 | 153400 | - | - | 41 | 220316 |
| 5 | வாடகை கட்டடம் (அரசு துறை) | - | - | 1 | 7200 | - | - | 1 | 7200 |
| 6 | வாடகை கட்டடம் (மத்திய சேமிப்பு கிடங்கு) | 1 | 4500 | 6 | 72850 | - | - | 7 | 77350 |
| மொத்தம் | | 252 | 893009 | 115 | 916129 | 18 | 282750 | 385 | 2091888 |

## 5.11 நியாய விலைக் கடைகள்:

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் கட்டுப்பாட்டில் 1,505 நியாயவிலைக் கடைகள் செயல்பட்டு வருகின்றன. இதில் 54 கடைகள் சொந்தக் கட்டடங்களிலும், 832 கடைகள் தனியார் வாடகைக் கட்டடங்களிலும், 619 கடைகள் பிற அரசுத்துறைக் கட்டடங்களிலும் இயங்கி வருகின்றன. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் கீழ் மண்டல வாரியாகச் செயல்படுகின்ற நியாயவிலைக் கடைகள் விவரம்:

| வ. எண் | மண்டலங்கள் | நியாயவிலைக் கடைகளின் எண்ணிக்கை | | |
|---|---|---|---|---|
| | | முழு நேரக் கடைகள் | பகுதி நேரக் கடைகள் | மொத்தம் |
| 1 | அரியலூர் | 2 | 0 | 2 |
| 2 | சென்னை (வடக்கு) | 300 | 0 | 300 |
| 3 | சென்னை (தெற்கு) | 168 | 0 | 168 |
| 4 | கோயம்புத்தூர் | 55 | 0 | 55 |
| 5 | தர்மபுரி | 32 | 12 | 44 |
| 6 | திண்டுக்கல் | 19 | 0 | 19 |
| 7 | ஈரோடு | 14 | 1 | 15 |

| | | | | |
|---|---|---|---|---|
| 8 | காஞ்சிபுரம் | 32 | 0 | 32 |
| 9 | செங்கல்பட்டு | 2 | 0 | 2 |
| 10 | கன்னியாகுமரி | 103 | 45 | 148 |
| 11 | கரூர் | 2 | 0 | 2 |
| 12 | கிருஷ்ணகிரி | 34 | 3 | 37 |
| 13 | மதுரை | 29 | 0 | 29 |
| 14 | நாமக்கல் | 44 | 1 | 45 |
| 15 | நீலகிரி | 23 | 5 | 28 |
| 16 | பெரம்பலூர் | 1 | 0 | 1 |
| 17 | புதுக்கோட்டை | 17 | 4 | 21 |
| 18 | இராமநாதபுரம் | 19 | 0 | 19 |
| 19 | சிவகங்கை | 24 | 2 | 26 |
| 20 | திருநெல்வேலி | 64 | 33 | 97 |
| 21 | தென்காசி | 116 | 53 | 169 |
| 22 | திருப்பூர் | 22 | 1 | 23 |
| 23 | திருவள்ளூர் | 6 | 0 | 6 |
| 24 | திருவண்ணாமலை | 3 | 0 | 3 |
| 25 | திருச்சிராப்பள்ளி | 20 | 0 | 20 |
| 26 | தூத்துக்குடி | 84 | 31 | 115 |
| 27 | வேலூர் | 37 | 0 | 37 |
| 28 | திருப்பத்தூர் | 6 | 0 | 6 |
| 29 | விருதுநகர் | 31 | 5 | 36 |
| | மொத்தம் | 1,309 | 196 | 1,505 |

## 5.12 நிதி நிலை :

இந்நிறுவனத்தின் தற்போதைய அனுமதிக்கப்பட்ட மற்றும் செலுத்தப்பட்ட மூலதனம்

முறையே ரூ.100.00 கோடி மற்றும் ரூ.71.73 கோடியாக உள்ளது.

2024-2025-ஆம் நிதியாண்டில் உணவு மானியத்திற்காக, ரூ.10,500 கோடி தமிழ்நாடு அரசால் வழங்கப்பட்டுள்ளது.

**தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் நிதி செயல்திறன் 2020-2021 முதல் 2022-2023 வரை :**

| | | | | ரூ. இலட்சத்தில் |
|---|---|---|---|---|
| | விவரங்கள் | 31.03.2023 | 31.03.2022 | 31.03.2021 |
| I | செயல்முறைகளின் மூலம் வருவாய் | 22,46,123.27 | 23,78,313.02 | 2,07,600.54 |
| II | மற்ற வருவாய் | 9,050.93 | 7,169.20 | 17,98,896.41 |
| III | மொத்த வருவாய் (I + II ) | 22,55,174.20 | 23,85,482.22 | 20,06,496.95 |
| IV | செலவுகள் | | | |
| | மூலப் பொருட்கள் நுகர்வு | 10,27,937.40 | 7,96,658.78 | 6,38,267.53 |
| | கொள்முதல் செய்யப்பட்ட வியாபாரப் பொருட்களின் மதிப்பு | 8,24,623.57 | 9,77,313.56 | 9,71,306.99 |
| | தயார் நிலையில் உள்ள பொருட்களின் இருப்பில் மாறுதல்கள், கட்டுமானத்தில் உள்ள பணிகள் மற்றும் வியாபார பொருட்கள் | -65,178.64 | 55,751.22 | -54,242.96 |
| | பணியாளர்கள் சேமநல செலவுகள் | 51,538.78 | 48,314.55 | 46,365.64 |
| | நிதி செலவினங்கள் | 1,10,754.71 | 74,429.97 | 53,499.52 |
| | தேய்மானம் மற்றும் போக்கெழுதல் செலவினங்கள் | 1,679.79 | 1,483.00 | 1,582.02 |
| | மற்ற செலவினங்கள் | 3,02,670.12 | 4,31,610.78 | 3,49,960.77 |
| | மொத்தச் செலவுகள் | 22,54,025.73 | 23,85,561.86 | 20,06,739.51 |
| V | அசாதாரண மற்றும் விதிவிலக்கான பொருட்கள் மற்றும் வரிக்கு முந்தைய இலாபம் (III - IV) | 1,148.47 | -79.64 | -242.56 |

| | | | | |
|---|---|---|---|---|
| VI | விதி விலக்கான இனங்கள் | -1,148.47 | 79.64 | -242.56 |
| VII | அசாதாரண இனங்கள் மற்றும் வரிக்கு முந்தைய இலாபம் (V-VI) | 0 | 0 | 0 |
| VIII | அசாதாரண இனங்கள் | 0 | 0 | 0 |
| IX | வரிக்கு முந்தைய இலாபம் (VII-VIII) | 0 | 0 | 0 |
| X | வரி செலவினம் | | | |
| | 1. நடப்பு வரி | 3,012.48 | 1,432.61 | 926.08 |
| | 2. தள்ளிவைக்கப்பட்ட வரி | 0 | 0 | 0 |
| | 3. முந்தைய காலவரி | 0 | 46.04 | 307.71 |
| XI | தொடர் செயல் முறையில் இலாபம் / நட்டம் (IX- X) | -3,012.48 | -1,478.65 | -1,233.79 |
| XII | இடையில் நிறுத்திய செயல் முறையில் இலாபம்/நட்டம் | 0 | 0 | 0 |
| XIII | இடையில் நிறுத்திய செயல் முறையில் வரிச் செலவினம் | 0 | 0 | 0 |
| XIV | இடையில் நிறுத்திய செயல் முறையில் வரிக்குபின் இலாபம் / நட்டம் (XII – XIII) | 0 | 0 | 0 |
| XV | நடப்பு கால இலாபம் / (நட்டம்) (XI + XIV) | -3,012.48 | -1,478.65 | -1,233.79 |
| XVI | ஒவ்வொரு பங்கு மூலதனத்தில் வருவாய் | | | |
| | 1. ஆதாரத் தொகை | 0 | 0 | 0 |
| | 2. நீர்மத் தன்மையுடைய தொகை | 0 | 0 | 0 |

தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகத்தின் வருமானம் மற்றும் செலவினங்களுக்கு இடையே உள்ள பற்றாக்குறையைச் சமாளிக்க தமிழ்நாடு அரசு தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு அரசு உத்திரவாதத்துடன் குறுகிய கால கடன் ரூ.24,000 கோடி வரை தேசியமயமாக்கப்பட்ட

வங்கிகள்/நபார்டு ஆகியவற்றிலிருந்து கடன் பெற அனுமதித்துள்ளது. நெல் கொள்முதல் மற்றும் அது தொடர்பான செலவினங்களுக்காக குறுகிய காலக் கடன் ரூ.4,000 கோடி நபார்டு வங்கியிடமிருந்து பெற அரசு பிரத்தியேகமாக அனுமதித்துள்ளது.

2023-2024-ஆம் நிதியாண்டில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் மற்றும் நபார்டு வங்கியில் இருந்து ரூ.23,500 கோடி கடன் பெற்றுள்ளது. அதில் ரூ.3,900 கோடி 2023-2024-ஆம் நிதி ஆண்டில் திருப்பிச் செலுத்தியது போக, 31.03.2024ல் ரூ.19,600 கோடி கடன் நிலுவையிலுள்ளது.

## 5.13 தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் வழங்கும் பிற சேவைகள்:

### 5.13.1 அமுதம் பல்பொருள் அங்காடிகள்:

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தால் அன்றாடம் தேவைப்படும் நுகர்பொருட்களை நியாயமான விலையில் பொது மக்களுக்கு விற்பனை செய்யும் நோக்குடன் 80 அமுதம் பல்பொருள் அங்காடிகள் செயல்பட்டு வருகின்றன.

வெளிச்சந்தையில் காய்கறி விலையேறிய காலங்களில் விலைக்கட்டுப்பாட்டு நடவடிக்கையாக 33,148 கிலோ தக்காளியும் 9,396 கிலோ வெங்காயமும் அமுதம் பல்பொருள் அங்காடிகள் மூலமாக மலிவு விலையில் விற்பனை செய்யப்பட்டன.

### 5.13.2 பெட்ரோல் / டீசல் விற்பனை நிலையங்கள்:

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் கடலூர் மண்டலத்தில் நெய்வேலியிலும், திருப்பத்தூர்

மண்டலத்தில் திருப்பத்தூரிலும், தஞ்சாவூர் மண்டலத்தில் பட்டுக்கோட்டையிலும் பெட்ரோல் / டீசல் விற்பனை நிலையங்களை நடத்தி வருகிறது. அனைத்து பெட்ரோல் / டீசல் விற்பனை நிலையங்கள் இலாபத்துடன் செயல்பட்டு வருகிறன்றன.

**5.13.3 சமையல் எரிவாயு விநியோக நிலையங்கள்:**

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், திருச்சிராப்பள்ளி மண்டலத்தில் தென்னூரிலும், திருவண்ணாமலை மண்டலத்தில் ஆரணியிலும், இராமநாதபுரம் மண்டலத்தில் இராமேஸ்வரம் மற்றும் மண்டபத்திலும் சமையல் எரிவாயு விநியோக நிலையங்களை நடத்தி வருகிறது. அனைத்துச் சமையல் எரிவாயு விநியோக நிலையங்களும் இலாபத்துடன் செயல்பட்டு வருகிறன்றன.

### 5.13.4 மண்ணெண்ணெய் விற்பனை நிலையங்கள்:

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் கீழ் 36 மண்ணெண்ணெய் வழங்கும் நிலையங்கள் பொது விநியோகத்திட்டத்திற்காக செயல்பட்டு வருகின்றன.

| வ. எண் | மண்ணெண்ணெய் வழங்கும் நிலைய விவரம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | மொத்த விற்பனை நிலையம் | 02 |
| 2 | மொத்த / சில்லரை விற்பனை நிலையம் | 05 |
| 3 | சில்லரை விற்பனை நிலையம் | 29 |
| | மொத்தம் | 36 |

### 5.13.5 அம்மா உணவகத்திற்கு உணவுப் பொருட்கள் வழங்குதல் :

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மாவட்டங்களில் செயல்படும் அம்மா உணவகங்களுக்கு அரிசியும் சென்னை மாவட்டத்தில் செயல்படும் அம்மா உணவகங்களுக்கு அரிசி மற்றும் கோதுமையும் விநியோகித்து வருகிறது.

| வ. எண் | ஆண்டு | அரிசி (மெ.டன்) | கோதுமை (மெ.டன்) |
|---|---|---|---|
| 1 | ஏப்ரல் 2023 முதல் மே 2024 | 6562.699 | 659.700 |

**5.13.6 மதிய உணவுத் திட்டம் :**

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் அரிசி, பருப்பு, கொண்டைக்கடலை, பச்சைப்பயிறு, பாமாயில் மற்றும் உப்பு உள்ளிட்ட உணவுப் பொருட்களை மதிய உணவுத் திட்டத்திற்கு தமிழ்நாடு முழுவதும் வழங்கி வருகிறது.

ஏப்ரல் 2023 முதல் மார்ச் 2024 வரை மதிய உணவுத் திட்டத்திற்கு வழங்கப்பட்ட பொருட்களின் விவரம் பின்வருமாறு.

| வ. எண். | உணவுப் பொருள்கள் | அளவு (மெ.டன்/பைகள் / பாக்கெட் |
|---|---|---|
| 1 | அரிசி | 68,978.718 |
| 2 | பருப்பு | 3,473.478 |
| 3 | கொண்டைக் கடலை | 1,147.337 |
| 4 | பச்சைப் பயிறு | 1,044.938 |
| 5 | பாமாயில் | 19,59,548 |
| 6 | உப்பு | 1,267.259 |

**5.13.7 ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம்:**

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் அரிசி, பருப்பு, கொண்டைக்கடலை, பச்சைப்பயிறு, பாமாயில், உப்பு உள்ளிட்ட உணவுப் பொருட்களை ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டத்திற்கு தமிழ்நாடு முழுவதும் வழங்கி வருகிறது.

ஏப்ரல் 2023 முதல் மார்ச் 2024 வரை ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டத்திற்கு வழங்கப்பட்ட பொருட்களின் விவரம் பின்வருமாறு.

| வ. எண். | உணவுப் பொருள்களின் பெயர்கள் | அளவு (மெ.டன்/பைகள் / பாக்கெட் |
|---|---|---|
| 1 | அரிசி | 20,171.320 |
| 2 | பருப்பு | 1,190.229 |
| 3 | கொண்டைக் கடலை | 316.187 |
| 4 | பச்சைப் பயிறு | 322.551 |
| 5 | பாமாயில் | 3,98,759 |
| 6 | உப்பு | 352.933 |

**5.13.8 முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் :**

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் அரிசி, சர்க்கரை, துவரம்பருப்பு, பாமாயில் மற்றும் உப்பு போன்ற உணவுப் பொருட்களை முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்திற்கு தமிழ்நாடு முழுவதும் வழங்கி வருகிறது.

ஏப்ரல் 2023 முதல் மார்ச் 2024 வரை முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்திற்கு வழங்கிய பொருட்களின் விவரம் பின்வருமாறு.

| வ. எண். | உணவுப் பொருள்களின் பெயர்கள் | அளவு (மெ.டன்/பைகள் / பாக்கெட் |
|---|---|---|
| 1 | அரிசி | 3,615.307 |
| 2 | சர்க்கரை | 6.263 |
| 3 | துவரம் பருப்பு | 2,955.327 |
| 5 | பாமாயில் | 6,42,368 |
| 6 | உப்பு | 3,14,485 |

**5.13.9 அரசு உப்பு விற்பனை:**

பொது மக்களின் பயன்பாட்டிற்குச் சுத்திகரிக்கப்பட்ட அயோடின் கலந்த தூள் உப்பு (RFF Salt) மற்றும் அயோடின் கலந்த கல் உப்பு (CIS Salt) ஆகிய இரண்டு வகையான உப்புகள் தமிழ்நாடு உப்பு நிறுவனத்திடமிருந்து பெறப்பட்டு தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக நியாய விலைக்கடைகளில் பொது மக்களுக்கு விற்பனை செய்யப்படுகின்றன. சுத்திகரிக்கப்பட்ட அயோடின் கலந்த தூள் உப்பு (RFF Salt) ஒரு கிலோ பாக்கெட் ரூ.12/-க்கும், அயோடின் கலந்த கல் உப்பு (CIS Salt) ஒரு கிலோ பாக்கெட் ரூ.10/-க்கும் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

**5.13.10 ஊட்டித் தேயிலை மற்றும் டான் டீ :**

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலம் நடத்தப்படும் நியாயவிலைக் கடைகள் மற்றும்

அமுதம் பல்பொருள் அங்காடிகளில் ஊட்டித் தேயிலைத் தூள் 100 கிராம் பாக்கெட் ஒன்று ரூ.25/- என்ற விலையிலும், டான் டீ தூள் 100 கிராம் பாக்கெட் ஒன்று ரூ.21/- என்ற விலையிலும் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

**5.14 பேரிடர் நிவாரணக் காலங்களில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் செயல்பாடுகள்:**

கடந்த டிசம்பர் 2023-ஆம் மாதத்தில் ஏற்பட்ட மிக்ஜாம் (Michaung) சூறாவளிப் புயலால் பாதிப்புக்குள்ளான சென்னை, திருவள்ளூர், செங்கல்பட்டு மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களில் உள்ள குடும்பங்களுக்குத் தலா ரூ.6,000/- வீதம் 23,18,222 குடும்ப அட்டைதாரர்களுக்கு தமிழ்நாடு அரசு அளித்த நிதியுதவி தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மூலம் வழங்கப்பட்டது.

கடந்த 2023 டிசம்பர் மாதத்தில் ஏற்பட்ட கடும் மழைப்பொழிவு மற்றும் வெள்ளத்தால் பாதிப்புக்குள்ளான திருநெல்வேலி, தூத்துக்குடி, தென்காசி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் உள்ள குடும்பங்களுக்குத் தலா ரூ.6,000/- வீதம் 6,36,970 குடும்ப அட்டைதாரர்களுக்கு தமிழ்நாடு அரசு அளித்த நிதியுதவியும் ரூ.1,000/- வீதம் 13,38,269 குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கப்பட்ட நிதியுதவியும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மூலம் வழங்கப்பட்டது. மேலும், தூத்துக்குடி, திருநெல்வேலி மாவட்டத்தில் மிக அதிகம் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நிவாரணமாக 5 கிலோ எடை கொண்ட 6,32,517 அரிசிப் பைகள் நியாய விலைக் கடைகள் மூலம் விநியோகிக்கப்பட்டன.

மேற்கூறிய பேரிடர் காலங்களில் மாவட்ட ஆட்சித் தலைவர்களின் கோரிக்கைகளின்படி தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மூலம் 299.310 மெட்ரிக் டன் அரிசி 29.545 மெ.டன் பருப்பு, 200 கிலோ கோதுமை, 400 கிலோ சர்க்கரை மற்றும் 4,120 பாக்கெட் பாமாயில் சமூகச் சமையலறைகளுக்கு வழங்கப்பட்டன.

**5.15 தரக்கட்டுப்பாட்டுப் பிரிவு** :

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் முறையாக ஏற்படுத்தப்பட்ட தரக் கண்காணிப்பு மற்றும் தரக்கட்டுப்பாட்டு வழிமுறைகளின் அடிப்படையில் பகுப்பாய்விற்குப் பின் தரமான பொருட்கள் கொள்முதல் செய்யப்பட்டு, பொது விநியோகத்திட்டத்திற்கு வழங்கப்பட்டு வருகின்றன. அறிவியல் ரீதியாக உணவுப் பொருட்கள் சேமிக்கப்பட்டு இட மேலாண்மையுடன் கிடங்குகள் நிர்வகிக்கப்படுகின்றன. கிடங்குகளிலுள்ள உணவுப் பொருட்களின் தரத்தைப் பாதுகாப்பதற்குப்

பரிந்துரைக்கப்பட்ட மருந்து தெளிக்கப்பட்டு உணவுப் பாதுகாப்பிற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, பூச்சிகள் தாக்கம் இல்லாத தரமான உணவுப் பொருட்கள் விநியோகிக்கப்படுவது உறுதி செய்யப்படுகிறது.

கிடங்குகளில் உள்ள பொருட்களின் தரத்தினைப் பாதுகாப்பதற்குத் தேவையான அடிப்படை உபகரணங்கள், ஈரப்பதமானிகள், பகுப்பாய்வு உபகரணங்கள், கலப்பு காட்டி முறை உபகரணங்கள், புகை மூட்டம் செய்வதற்கான கருப்பு பாலித்தீன் உறைகள், உணவுப் பொருட்கள் அடுக்கி வைப்பதற்கு இடைச்செருகு கட்டைகள், பூச்சிக்கொல்லி மருந்துகள், புறஊதாக் கதிர் விளக்குப் பொறிகள் மற்றும் மருந்து தெளிப்பான்கள் ஆகியவற்றினைக் கொண்டு உணவுப் பொருட்களின் தரம் 100% உறுதிப்படுத்தப்படுகின்றது.

இந்திய உணவுக் கழகம் பரிந்துரைத்தபடி, தற்போது 50 எண்ணிக்கையிலான அச்சுப்பொறியுடன் கூடிய டிஜிட்டல் ஈரப்பதமானிகள் மண்டலங்களில் உள்ள ஆய்வகங்களில் பயன்படுத்தப்படுகின்றன.

**5.16 மிக்ஜாம் புயல் மற்றும் வடகிழக்குப் பருவமழையால் ஏற்பட்ட திடீர் வெள்ளத்தால் சேதமடைந்த உணவுப்பொருட்கள் மாற்றி வழங்கப்பட்டது:**

சென்னையில் மிக்ஜாம் புயல் காரணமாக ஏற்பட்ட பெருமழை வெள்ளத்தில் கழகத்திற்குச் சொந்தமான 70 பொது விநியோக அங்காடிகளில் சேதமடைந்த அரிசி, கோதுமை, பருப்பு மற்றும் பாமாயில் உள்ளிட்ட உணவுப் பொருட்களை உடனடியாக தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தினால் மாற்றி வழங்கப்பட்டது. அதே போன்று 2023 டிசம்பர் மாதத்தில் வடகிழக்குப் பருவமழையால் ஏற்பட்ட திடீர்

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட தென் மாவட்டங்களான தூத்துக்குடி, திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரியில் கழகத்திற்குச் சொந்தமான 48 பொது விநியோக அங்காடிகளில் சேதமடைந்த உணவுப் பொருட்களுக்கு இணையான பொருட்கள் உடனடியாக மாற்றி வழங்கப்பட்டு தங்குதடையின்றி பொது விநியோகத்திட்ட பொருட்கள் பொது மக்களுக்கு விநியோகிக்கப்பட்டன.

**5.17 பொது விநியோகத்திட்டப் பயனாளிகளுக்கு 2024-ஆம் ஆண்டு பொங்கல் பரிசு விநியோகம்:**

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தால் எடுக்கப்பட்ட சீரிய நடவடிக்கையின் காரணமாக தரமான பச்சரிசி மற்றும் சர்க்கரை பொது விநியோக அங்காடிகள் மூலம் பொது மக்களுக்குச் சிறப்பான முறையில் விநியோகம் செய்யப்பட்டன.

**5.18 தரக்கட்டுப்பாட்டுச் செயல்பாடுகளைக் காட்சிப்படுத்துதல்** :

பொது விநியோகத்திட்டப் பொருட்களின் தரப்பரிசோதனைகளை விளக்கிடும் பொருட்டு, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தால் கொள்முதல் பணியில் பயன்படுத்தப்படும் தரக்கட்டுப்பாடு உபகரணங்கள் கடந்த 25.11.2023 அன்று கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு சென்னை கலைவாணர் அரங்கத்தில் காட்சிப்படுத்தப்பட்டன. மேலும், 13.01.2024 அன்று சென்னை தீவுத்திடல் பொருட்காட்சியில் கழகத்திற்கென ஒதுக்கப்பட்ட அரங்கத்தில் தரக்கட்டுப்பாட்டு உபகரணங்கள் மற்றும் அமுதம் பல்பொருள் அங்காடியில் விற்பனை செய்யப்படும் பொருட்கள் காட்சிப்படுத்தப்பட்டு விற்பனைக்கு வைக்கப்பட்டன. இந்நிகழ்வுகளில், அரசு

திட்டங்களுக்கான தரமான உணவுப் பொருட்கள் விநியோகம் செய்யப்படும் வழிமுறைகள் மற்றும் நடைமுறைகள் விளக்கப்பட்டன. பொது விநியோகத்திட்டப் பொருட்களின் தரத்தை உறுதிப்படுத்த அரசு மற்றும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் எடுத்துள்ள முயற்சிகளைப் பார்வையாளர்கள் வெகுவாகப் பாராட்டினர்.



### 5.18.1 சிறப்புப் பொது விநியோகத் திட்ட உணவுப் பொருட்களில் தரப்பரிசோதனை :

மின்னணு ஒப்பந்தப்புள்ளி நடைமுறையின் மூலம் கொள்முதல் செய்யப்படும் பருப்பு மற்றும் பாமாயில் ஆகியவற்றின் மாதிரிகள் **அக்மார்க்** மற்றும் NABL (தேசிய சோதனை மற்றும் அளவு ஆய்வகங்களுக்கான வாரியம்) அத்தாட்சி பெற்ற ஆய்வகங்களுக்குப் பகுப்பாய்விற்காக அனுப்பப்பட்டு, அவை அனுமதிக்கப்பட்ட தரத்துடன் உள்ளதை உறுதி செய்த பின் விநியோகிக்கப்படுகிறது.

இறக்குமதி செய்யப்பட்ட துவரம் பருப்பு, கனடியன் மஞ்சள் பருப்பு (முழு) மற்றும் உள்நாட்டு துவரம் பருப்பு (ஃபட்கா) ஆகியவற்றின் ஊட்டச்சத்து அளவு:

| வ. எண். | அளவு கோல் | அலகு | கனடியன் மஞ்சள் பருப்பு | இறக்குமதி செய்யப்பட்ட துவரம் பருப்பு | உள்நாட்டு துவரம் பருப்பு |
|---|---|---|---|---|---|
| 1. | புரதம் | (%) | 27.37 | 21.79 | 21.22 |
| 2. | மாவுச்சத்து | (%) | 58.59 | 62.89 | 64.96 |
| 3. | ஆற்றல் | கி.கலோ/100கி | 349.15 | 352.13 | 356.33 |
| 4. | கொழுப்பு | (%) | 0.59 | 1.49 | 1.29 |
| 5. | சாம்பல் | (%) | 2.52 | 9.87 | 8.60 |

பொது விநியோகத் திட்டத்தின்கீழ் விநியோகம் செய்யப்படவுள்ள உணவுப் பொருட்களின் தரத்தை உறுதி செய்வதற்காக, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் அனைத்து மண்டலங்களிலும் பகுப்பாய்வு கூடங்கள் நிறுவப்பட்டுள்ளன. ஒவ்வொரு பகுப்பாய்வுக் கூடத்திலும் உணவு பொருட்களைப் பகுப்பாய்வு செய்வதற்குத் தரக்கட்டுப்பாட்டுப் பணியாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

**5.18.2 தரக்கட்டுப்பாட்டுப் பணியாளர்களுக்கான பயிற்சி:**

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் உள்ள தரக்கட்டுப்பாட்டுப் பணியாளர்களுக்கு ஹைதராபாத்தில் உள்ள IGMRI (இந்திய தானிய சேமிப்பு மேலாண்மை மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்) மூலம் தொடர்ந்து பயிற்சிகள் அளிக்கப்பட்டும் புத்தாக்கப் பயிற்சியின் மூலமும் பணியாளர்களின் திறன் மேம்படுத்தப்படுகிறது.

புதிதாக நியமிக்கப்பட்ட 200 இளநிலை தர ஆய்வாளர்களுக்கு (JQI) 05.06.2023 முதல் 07.07.2023 வரை சென்னையில் உள்ள நடேசன் கூட்டுறவு மேலாண்மை நிறுவனத்தின் மூலம் தரக்கட்டுப்பாடு தொடர்பான பயிற்சி அளிக்கப்பட்டது. மேலும், அவ்வப்போது காணொளி காட்சியின் மூலமாக சமீபத்திய தொழில் நுட்பங்கள் மற்றும் வழிகாட்டு

நெறிமுறைகளின்படி தரம் சோதித்தல் பற்றி விளக்கப்பட்டு அதன்படி பொருள் கொள்முதல் செய்வது உறுதி செய்யப்படுகிறது.

**5.19 மின்னணு வசதிகளுடன் கூடிய நேரடி கொள்முதல் நிலையங்கள்:**

உழவர்கள் தங்களது நெல்லினை விரைவாக நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் விற்பனை செய்வதில் உள்ள சிரமங்களை நீக்கும் வகையில், பொது இணையதளம் (https://tncsc-edpc.in) தொடங்கப்பட்டு, அனைத்து மாவட்டங்களிலும் செயல்படும் நேரடி நெல் கொள்முதல் நிலையங்களுக்கு விற்பனை முனையக்கருவிகள் (POS) வழங்கப்பட்டன. விவசாயிகள் இந்தப் பொது இணையதளத்தில், நிலவிவரங்கள், ஆதார் அங்கீகாரம், சாகுபடி பரப்பு விவரங்கள், அறுவடைக்கான நேரம், கைபேசி எண் மற்றும் வங்கிக் கணக்கு எண் போன்ற அடிப்படை

விவரங்ளுடன் தங்கள் பெயர்களைப் பதிவு செய்ய முடியும். கிராம நிர்வாக அலுவலர், இணையதளம் மூலம் ஆவணங்களைச் சரிபார்த்த பிறகு டோக்கன் தோற்றுவிக்கப்பட்டு, விவசாயிகளின் கைப்பேசிக்கு நெல் கொள்முதல் தேதி மற்றும் நேரம் குறுஞ்செய்தியாக அனுப்பி வைக்கப்படுகிறது. கொள்முதல் செய்யப்பட்ட அளவிற்கான ரசீதுகள் கொள்முதல் செய்யப்படும் நெல்லின் தரம் மற்றும் எடையைச் சரி பார்த்தவுடன் உடனடியாக வழங்கப்பட்டு வருகிறன்றன.

மேலும், அந்தத் தொகை அவரது வங்கிக் கணக்கில் நேரடியாக மின்னணு பரிவர்த்தனை (ECS) மூலம் உடனடியாக வரவு வைக்கப்படுகிறது. அதே நேரத்தில் விவசாயி பதிவு செய்யப்பட்ட கைபேசி எண்ணுக்கு குறுஞ்செய்தியும் அனுப்பப்படுகிறது.

இவ்வாறு கொள்முதல் செய்யப்பட்ட நெல், கணினிச் செயலியைப் பயன்படுத்தி அருகில் உள்ள அரவை ஆலைக்கு இயக்கம் செய்யப்பட்டுக் கிடங்குகளில் அரிசியாக பெறப்படுகிறது, நெல் கொள்முதல் செய்வது முதல் கிடங்குகளில் அரிசி இருப்பு வைப்பது வரை அனைத்து நடவடிக்கைகளும் கணினி மையப்படுத்தப்பட்ட வலையதளத்தின் வாயிலாகக் கண்காணிக்கப்படுகிறது.

**5.20 துரித நகர்வுக்கு போக்குவரத்து வழிதடங்களைச் சீரமைத்தல்:**

மாநிலத்தில் பொது விநியோகத் திட்ட முறையின் செயல் திறனை மேம்படுத்துவதற்காக தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் உணவு தானியங்களைக் கொண்டு செல்வதற்கான

போக்குவரத்து வழி தடங்களைச் சீரமைத்து செயல்படுத்துகிறது.

உணவு தானியம் போக்குவரத்தில் தூரம் மற்றும் செலவைக் குறைத்து பணியை மேம்படுத்துவதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

**5.21 உள்கட்டமைப்பை மேம்படுத்துதல்:**

கொள்முதல் செய்யப்படும் நெல்லினை மழை, வெள்ளம் போன்ற இயற்கை இடர்ப்பாடுகளிலிருந்து பாதுகாத்திட மேற்கூரை அமைப்புடன் கூடிய புதிய நவீன நெல் சேமிப்புத் தளங்களை அமைத்திடுமாறு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டு, அதன்படி 10 மாவட்டங்களில் 18 இடங்களில் 2.83 இலட்சம் மெ.டன் கொள்ளளவு கொண்ட மேற்கூரை அமைப்புடன் கூடிய நவீன நெல்

சேமிப்புத் தளங்கள் ரூ.238.07 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுப் பயன்பாட்டில் உள்ளன.

28,000 மெ.டன் கொள்ளளவு கொண்ட 12 வட்ட செயல்முறைக் கிடங்குகள் 8 மாவட்டங்களில் ரூ.54.00 கோடி திட்ட மதிப்பீட்டில் நபார்டு நிதியுதவியுடன் கட்டப்பட்டு வருகின்றன.

2023-2024-ஆம் நிதியாண்டில் மொத்தம் 17,500 மெ.டன் கொள்ளளவிலான 7 சேமிப்புக் கிடங்குகள் ரூ. 32 கோடி திட்ட மதிப்பீட்டில் நபார்டு நிதி உதவியுடன் கட்டுப்பட்டு வருகின்றன.

2023-2024 நிதியாண்டில் கூடுதலாக 6 மாவட்டங்களில் 8 இடங்களில் மொத்தம் 1,17,000 மெ.டன் கொள்ளளவு கொண்ட மேற்கூரை அமைப்புடன் கூடிய நவீன நெல் சேமிப்புத் தளங்களை ரூ.95.00 கோடி திட்ட மதிப்பீட்டில் நிறுவ அரசால்

ஆணையிடப்பட்டுக் கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

**5.22 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் கட்டுதல்** :

நெல் கொள்முதலின் முக்கியவத்துவம் மற்றும் விவசாயிகளின் நலனைக் கருத்திற் கொண்டு நிரந்தர நேரடி நெல் கொள்முதல் நிலையங்களை நெல் அறுவடை அதிகம் உள்ள பகுதிகளில் அமைக்க அரசு உறுதி பூண்டுள்ளது. மேலும், நேரடி நெல்கொள்முதல் நிலையங்களுக்கான நிரந்தரக் கட்டமைப்பை படிப்படியாக உருவாக்குவதற்கும் நடவடிக்கைகள் அரசால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 625 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் கட்டி முடிக்கப்பட்டு சொந்தக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன.

நபார்டு வங்கியின் நிதியுதவியுடன் மொத்தம் ரூ.50 கோடி செலவில் தலா 250 மெ.டன் சேமிப்புத்திறன்

கொண்ட 80 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் கட்டுவதற்கு அரசால் அறிவிக்கப்பட்டு, பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. அதே ஆண்டில் மகாத்மாகாந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தின்கீழ் 50 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் ரூ.17.00 கோடி மதிப்பீட்டில் கட்டும் பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

2023-2024-ஆம் நிதியாண்டில் 100 எண்ணிக்கை யிலான நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் ரூ.33.00 கோடி திட்ட மதிப்பீட்டில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதியளிப்புத் திட்டத்தின் கீழ் டெல்ட்டா மற்றும் பிற மாவட்டங்களில் தமிழ்நாடு முழுவதும் கட்டுவதற்கு அரசால் அறிவிக்கப்பட்டு, தற்பொழுது பணிகள் பல்வேறு நிலைகளில் நடைபெற்று வருகின்றன.

**5.23 நிர்வாக நடவடிக்கைகள் :**

2023-2024-ஆம் ஆண்டிற்கான அனைத்துப் பதவி உயர்வுகளுக்கும் தேர்ந்தோர் பெயர்ப் பட்டியல்கள் வெளியிடப்பட்டு, மொத்தம் 161 பணியாளர்கள் பதவி உயர்வு பெற்றனர். 07.05.2021 முதல் தற்போது வரை 124 பணியாளர்கள் கருணை அடிப்படையில் நியமிக்கப்பட்டனர். 591 பருவகாலப் பணியாளர்கள் நிரந்தரப்படுத்தப்பட்டனர். தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் ஓய்வு பெற்ற ஊழியர்கள் மற்றும் சுமை தூக்கும் பணியாளர்களுக்கு மாதந்தோறும் மண்டல அளவில் குறைதீர்க்கும் கூட்டம் நடைபெற்று வருகிறது. மேலும் அரசு ஆணையின்படி பட்டியலின ஊழியர்களின் குறைதீர்க்கும் கூட்டமும் காலாண்டுக்கு ஒருமுறை நடைபெற்று வருகிறது.

## இயல் - 6

## தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம்

**6.1 முகவுரை:**

தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம் 02.05.1958 முதல் விவசாய உற்பத்திச் சட்டம் 1956 - ன்படி தோற்றுவிக்கப்பட்டு சேமிப்புக் கிடங்குகள் சட்டம் 1962-ன்படி செயல்பட்டு வருகிறது. வேளாண் பொருட்களின் தரம் மற்றும் அளவினைப் பாதுகாத்து விவசாயிகள் மற்றும் விவசாயத்தைச் சார்ந்த நிறுவனங்களைப் பயன்பெறச் செய்வதே இதன் நோக்கமாகும். தமிழ்நாடு அரசு மற்றும் மத்திய சேமிப்புக் கிடங்கு நிறுவனம் ஆகியவை இந்நிறுவனத்தின் இரு பங்குதாரர்கள் (50:50) ஆவர்.

**6.2 நிறுவன அமைப்பு :**

தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் முக்கிய முடிவுகள் அனைத்தும் இயக்குநர் குழுவால்

எடுக்கப்படுகின்றன. இக்குழுவில் மாநில அரசின் சார்பில் தலைவர் உள்ளிட்ட 6 பிரதிநிதிகளும் ஒன்றிய அரசின் சார்பில் 5 பிரதிநிதிகளும் உள்ளனர். தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவன மேலாண்மை இயக்குநரின் கண்காணிப்பின் கீழ் சேமிப்புக் கிடங்குகளின் செயல்பாடுகளை ஒருங்கிணைத்துச் செயல்பட 7 மண்டல மேலாளர்களும், மண்டல மேலாளர்களின் கண்காணிப்பின் கீழ் ஒவ்வொரு சேமிப்புக் கிடங்குக்கும் ஒரு சேமிப்புக் கிடங்கு மேலாளரைக் கொண்டும் இந்நிறுவனம் இயங்கி வருகிறது. காஞ்சிபுரம், கடலூர், திருச்சிராப்பள்ளி, சேலம், மேட்டுப்பாளையம், திண்டுக்கல் மற்றும் திருநெல்வேலி ஆகிய 7 மண்டல அலுவலகங்கள் மூலம் 60 சேமிப்புக் கிடங்குகளில் சரக்கு கையாளும் பணிகள் கண்காணிக்கப்படுகின்றன.

**6.3 கிடங்குகளின் கொள்ளளவு மற்றும் செயல்பாடுகள்:**

தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம் 60 சொந்த சேமிப்புக் கிடங்கு வளாகங்களில் 272 கிடங்குகளுடன் 7.71 இலட்சம் மெ.டன் கொள்ளளவுடன் செயல்பட்டு வருகிறது. இந்நிறுவனக் கிடங்குகளில், இந்திய உணவுக் கழகம், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், தமிழ்நாடு பாடநூல் கழகம், தேசிய வேளாண் விற்பனை இணையம், தமிழ்நாடு மாநில விற்பனை இணையம், அரசு நிறுவனங்கள், மற்றும் பிற நிறுவனங்களால் சேமிக்கப்படும் அரிசி, கோதுமை, பாடப்புத்தகங்கள், பருப்பு வகைகள், எண்ணெய் வித்துகள் மற்றும் விவசாயிகள் / வியாபாரிகளின் விவசாய விளைபொருட்களான நெல், விதைகள், முந்திரி, உளுந்து, கொப்பரை, துவரை, மற்றும் விவசாய இடு

பொருட்களான உரங்கள் ஆகியவை சேமிப்புக் கிடங்குகளில் பாதுகாப்பாக இருப்பு வைக்கப்பட்டு வருகின்றன.

தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம் கடந்த 2023-2024-ஆம் நிதியாண்டில் சராசரியாக 92 விழுக்காடு பயனீட்டு அளவை எட்டியுள்ளது. மேலும் தொடர்ந்து அனைத்து சேமிப்புக் கிடங்குகளிலும் பயனீட்டு அளவை அதிகரிக்கும் பொருட்டு விவசாயிகள், அரசு நிறுவனங்கள், அரசு கழகங்கள் மற்றும் முக்கிய தனியார் சரக்கு வைப்பாளர்களுக்குச் சரக்கு வைப்புக் கட்டணத்தில் தள்ளுபடிச் சலுகைகள் தொடர்ந்து அளிக்கப்பட்டு வருகின்றன.

**6.4 தரக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள்:**

தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம் சேமிப்பு மற்றும் சரக்குகளின் தரத்தினை முறையாகப்

பாதுகாத்திடச் செயல்பட்டு வருகிறது. இந்நிறுவனம் நீண்ட அனுபவத்துடனும் நவீன தொழில் நுட்பமுறையுடனும் விஞ்ஞான முறையில் சரக்குகளைப் பாதுகாத்திட பூச்சிகள் தடுப்பு மற்றும் நிவர்த்தி முறையில் நடவடிக்கைகள் எடுத்து வருகிறது.

பூச்சிகள் தாக்குதலினால் வேளாண் விளைபொருட்கள் இருப்பில் இழப்பு ஏற்படுவதைக் குறைத்திடும் வகையில் இந்நிறுவனப் பணியாளர்களுக்குப் பல்வேறு பூச்சிக் கட்டுப்பாட்டு மருந்துகள் கையாள்வது குறித்து ஹைதராபாத்தில் உள்ள தேசியப் பயிர்ப் பாதுகாப்பு நிலையம் (NIPHM) வழியாகப் போதுமான பயிற்சிகள் அளிக்கப்பட்டு உள்ளன. காலமுறைப்படி தொடர்ந்து சரக்குகளைக் கண்காணித்து பூச்சிகள் தாக்காத வண்ணம் பராமரித்ததன் பயனாக கடந்த 2023-2024ஆம்

நிதியாண்டில் சேமிப்பு இழப்பு (Storage Loss) மற்றும் நடையிடை இழப்பானது (Transit Loss) அனுமதிக்கப்பட்ட இழப்பான 0.50 விழுக்காட்டினைக் காட்டிலும் மிகவும் குறைவாக 0.02 விழுக்காடாகக் குறைக்கப்பட்டுள்ளது.

**6.5 பூச்சித் தடுப்பு நடவடிக்கைகள்** :

கிருமி நாசினி விரிவாக்கச் சேவைத் திட்டத்தின் (DESS) கீழ் பிற நிறுவனங்களில் பூச்சி தடுப்புப் பணிகள் மேற்கொள்வதும் தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் மற்றொரு பணியாகும். இந்நிறுவனம் பூச்சிக்கட்டுப்பாட்டுச் சேவைகள், எலித்தொல்லை, மற்றும் கொசுத்தொல்லையிலிருந்து பாதுகாக்கும் பணிகளுடன் கட்டுமானப் பணிக்கு முந்தைய மற்றும் பிந்தைய கரையான் பூச்சித் தடுப்புப் பணிகளையும் மேற்கொண்டு வருகிறது.

**6.6 நிதிநிலை செயலாக்கம்** :

2022-2023ஆம் நிதியாண்டில் இந்நிறுவனம் ரூ.109.34 கோடி வருமானம் ஈட்டியுள்ளது. நிகர இலாபம் ரூ.24.77 கோடியாகும். தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம் தமது இரு பங்குதாரர்களான தமிழ்நாடு அரசு மற்றும் மத்திய சேமிப்புக் கிடங்கு நிறுவனத்திற்கு நிகர இலாபத்தில் 30 விழுக்காட்டுத் தொகையினை 2022-2023 நிதியாண்டிற்கான ஈவுத்தொகையாக தலா ரூ.3.71 கோடி வழங்கியுள்ளது.

**6.7 மாற்றத்தக்க சேமிப்புக் கிடங்கு இரசீதுகள் மூலம் கடன் வழங்குதல்** :

தமிழ்நாடு சேமிப்புக் கிடங்குகள் அனைத்தும் சேமிப்புக் கிடங்கு வளர்ச்சி மற்றும் ஒழுங்குமுறை ஆணையத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன. இந்நிறுவனம் விவசாயிகளிடையே மாற்றத்தக்க சேமிப்புக் கிடங்கு இரசீதுகளின் பயன்பாடு மற்றும் கடன்

பெறும் வசதி குறித்துப் பெருமளவு விழிப்புணர்வு ஏற்படுத்தி உள்ளது. 2023-2024 நிதியாண்டில் இந்நிறுவனம் பல்வேறு சரக்கு வைப்பாளர்களுக்கு, 203 மாற்றத்தக்க சேமிப்புக் கிடங்கு இரசீதுகளை வழங்கி அதனை வங்கிகளில் அடமானம் வைத்துச் சரக்கு வைப்பாளர்கள் ரூ.45.36 கோடி கடன் பெற்றுப் பயனடைந்துள்ளனர்.

**6.8 கட்டுமானம்** :

தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம் கிடங்கு செயல்திறனை அதிகரிக்கும் வகையில் கடந்த 2022-2023 நிதியாண்டில் தலா 3,400 மெ.டன் கொள்ளளவு கொண்ட மூன்று புதிய கிடங்குகள் ரூ.7.20 கோடி மதிப்பீட்டில் புதுக்கோட்டை, திருமங்கலம் மற்றும் இராணிப்பேட்டை சேமிப்புக் கிடங்கு வளாகங்களில் கட்டிமுடிக்கப்பட்டு கடந்த 08.09.2023 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

அவர்களால் திறந்து வைக்கப்பட்டுப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

சட்டமன்ற அறிவிப்பின்படி 2023-2024 ஆம் நிதியாண்டில் தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம் 3,400 மெ.டன் கொள்ளளவு கொண்ட கூடுதல் புதிய கிடங்கு ரூ.2.80 கோடி மதிப்பீட்டில் பல்லடம் சேமிப்புக் கிடங்கு வளாகத்திலும் மற்றும் திருப்பத்தூர் மற்றும் அரியலூர் ஆகிய இடங்களில் தலா 3400 மெ.டன் கொள்ளளவு கொண்ட இரண்டு புதிய கிடங்குகள் ரூ.7.20 கோடி மதிப்பீட்டில் கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

# முடிவுரை

தமிழ்நாட்டின் சமூகப் பொருளாதார முன்னேற்றத்தின் தந்தை முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் தோற்றுவித்த தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், அவர் கொண்டு வந்த சிறப்புப் பொது விநியோகத் திட்டம் மற்றும் அனைத்துக் குடும்பங்களுக்கும் சமையல் எரிவாயு இணைப்பு வழங்க எடுத்த நடவடிக்கைகள் ஆகியவற்றின் காரணமாக தமிழ்நாடு அடைந்த முன்னேற்றத்திற்கு கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழா கொண்டாடும் நேரத்தில் உணவுத் துறை அவரை நன்றியுடன் நினைத்துப் பார்க்கிறது.

அனைவருக்கும் உணவை உறுதி செய்து அனைவருக்கும் சத்தான உணவு என்னும் இலக்கை எட்டிக் கொண்டிருக்கிறது நம் அரசு.

நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றங்களில் முதல்முறையாக காலிப் பணியிடங்கள் அனைத்தையும் நிரப்பி, நுகர்வோரிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தி

நுகர்வோர் பாதுகாப்பில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை அடைந்திருக்கிறோம்.

உணவுப்பொருள் கடத்தல் மற்றும் பதுக்கலைத் தடுக்கும் பணிகளைத் தீவிரப்படுத்தி உணவுப் பொருட்களின் விலை ஏற்றத்தைக் கட்டுப்படுத்த நடவடிக்கைகள் எடுத்து பொதுமக்கள் தொடர்ந்து பாராட்டுமளவுக்குத் தரமான அரிசியைத் தொடர்ந்து வழங்கி வருகிறோம்.

நெல்லுக்கு ஊக்கத் தொகையை அதிகப்படுத்தி, சேமிப்புக் கிடங்குகளை அதிகம் கட்டி, நெல் கொள்முதல் நிலையங்களை அதிகம் திறந்து அனைவருக்கும் உணவளிக்கும் நெல் விவசாயிகளின் நலனை மேம்படுத்த தொடர்ந்து நடவடிக்கை எடுத்து வருகிறோம்.

**"செந்தமிழ் நாடெனும் போதினிலே**
**இன்பத் தேன் வந்து பாயுது காதினிலே"**

என்ற பாரதியாரின் வாக்கிற்கேற்ப வளமான தமிழ்நாட்டை உருவாக்கி இந்தியாவின் முதன்மை

மாநிலமாக முன்னேற்றும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் கனவினை நிறைவேற்றுவோம்.

**அர. சக்கரபாணி**

**உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர்**



"உழுவார் உலகத்தார்க்கு ஆணி அஃதாற்றாது
எழுவாரை எல்லாம் பொறுத்து"

அனைத்து அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்குப் பொங்கல் பரிசுத் தொகுப்புடன் 1000 ரூபாய் ரொக்கப் பரிசு வழங்கும் திட்டத்தினை 10.01.2024 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார்கள்.




**'ஒரு நெல்மணி கூட வீணாகக் கூடாது'**
**–மாண்புமிகு முதலமைச்சர்**

21 கோடியே 81 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்ட 16 நவீன நெல் சேமிப்புத் தளங்களை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 22.01.2024 அன்று திறந்து வைத்தார்கள்.




"ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது
ஊதியம் இல்லை உயிர்க்கு"

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மற்றும் சேமிப்புக் கிடங்கு நிறுவன ஊழியர்கள் ஒரு கோடியே ஒரு இலட்சம் ரூபாய் முதலமைச்சர் நிவாரண நிதி வழங்கல்.




'பொதுமக்கள் சேவையில் அமுதம் மக்கள் அங்காடி'

மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் 08.07.2023 அன்று கோபாலபுரத்தில் நவீனமயமாக்கப்பட்ட அமுதம் அங்காடியைத் திறந்து வைத்து விற்பனையைத் தொடங்கி வைத்தார்கள்.




மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் "நீங்கள் நலமா" திட்டத்தில் உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை சார்பாக மக்களிடம் அலைபேசி வாயிலாகக் கருத்தினை மாண்புமிகு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள் கேட்டறிந்தார்.



"மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் துயர் துடைப்பில் மாண்புமிகு முதலமைச்சர் அரசு"

தூத்துக்குடி மாவட்டத்தில் மழைவெள்ளத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்குத் தலா ரூ.6000/- நிவாரணத் தொகை மற்றும் 5 கிலோ அரிசி வழங்கப்பட்டது.



மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆட்சி பொறுப்பேற்றதிலிருந்து 2009 புதிய முழுநேர மற்றும் பகுதிநேரக் கடைகள் திறக்கப்பட்டுள்ளன.



அஞ்சல் வழியில் நகல் குடும்ப அட்டைகள் வழங்கும் முறையினை மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் தொடங்கி வைத்தார்.



பொது விநியோகத் திட்டப் பணியில் முக்கிய அங்கமாகத் திகழும் நியாயவிலை அங்காடிகளின்
விற்பனையாளர்கள் மற்றும் கட்டுனர்கள் பணியினை ஊக்குவித்திட மாநில மற்றும் மாவட்ட அளவிலான
சிறந்த விற்பனையாளர்கள் மற்றும் கட்டுனர்களுக்கு ரொக்கப் பரிசு மற்றும் சான்றிதழ்கள்
மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டன.

பிணியின்மை செல்வம் விளைவின்பம் ஏமம்
அணியென்ப நாட்டிற்கிவ் வைந்து.

- திருவள்ளுவர்

மக்களுக்கு நோயற்ற வாழ்வு, விளைச்சல் மிகுதி, பொருளாதார வளம், இன்ப நிலை, உரிய பாதுகாப்பு ஆகிய ஐந்தும் ஒரு நாட்டுக்கு அழகு எனக் கூறப்படுபவைகளாகும். தமிழ்நாட்டை இந்தியாவின் முதன்மை மாநிலமாக்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் எண்ணத்திற்குச் செயல்வடிவம் கொடுப்போம்!,